வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 02.02.2022 புதன்கிழமை | இதழ் : 59 | பக்கங்கள் : 16




### இந்திய அத்துமீறலை கண்டித்து

# யாழ்ப்பாணத்தில் இன்று முழுமுடக்க போராட்டம்!

### கடற்றொழிலாளர்கள் விடுத்தனர்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 02

**இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டத்தை முழுமையாக முடக்கிப் போராடுவதற்கு மீனவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.**

15

## அரச அலுவலகங்களை வடக்கில் முடக்குவோம்!

### மீனவர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 02

இந்திய மீனவர்களால் யாழ்ப்பாண மீனவர்கள் கொலை செய்யப்படுகின்றமை, மீன்பிடி உபகரணங்கள் அழிக்கப்படுகின்றமை உட்பட்ட அத்துமீறல்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் வடக்கின் அரச அலுவலகங்களை முடக்கத் தீர்மானித்துள்ளதாக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

15

## மீனவர் சங்கங்களை பேச்சுக்கு அழைக்கிறார் வடக்கு ஆளுநர்!

யாழ்ப்பாணம், பெப். 02

வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக, மீனவர் சங்கங்களுக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த பேச்சு இன்று புதன்கிழமை சூம் தொழில்நுட்பம் ஊடாக இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களாக இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்ட மீனவர்கள் பல்வேறு பிரச்

15

## வடக்கு கடற்பரப்புக்குள் நுழைந்த இந்திய மீனவர்கள் 21 பேர் சிக்கினர்!

### வடமராட்சி மீனவர் வளைத்து பிடித்து கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்

யாழ்ப்பாணம், பெப். 02

வடக்கு கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களின் இரு படகுகளும் கைப்பற்றப் பட்டுள்ளன.

தமிழக மீன்பிடிப் படகுகளை நேற்று முன்தினம் இரவு நடுக்கடலில் வடமராட்சி மீனவர்கள் சுற்றிவளைத்ததால் பதற்ற நிலை ஏற்பட்டது. இதன்போது இரண்டு மீன்பிடிப் படகுகளுடன் 21 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை நாகை மாவட்டம் வேதாரண்யம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து 400க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட

15

## கொரோனா மரணம் 32ஆக அதிகரித்தது!

கொழும்பு, பெப். 02

நாட்டில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொரோனா தொற்றால் மேலும் 32 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று அறிவித்தது.

உயிரிழந்தவர்களில் 15 ஆண்களும், 17 பெண்களும் உள்ளடங்குவர். இதனால் தொற்றால் இறந்தோரின் தொகை 15, 473ஆக உயரந்துள்ளது.

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின்

## இயலாமையை அரசு பாவிக்க முயல்வது வெட்கத்துக்குரியது!

### சர்வதேச மன்னிப்பு சபை

புதுடில்லி, பெப். 02

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்பதை ஆராய்ந்து, அவ்வாறான சம்பவங்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களைக் கண்டறிவதற்குப் பதிலாக காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் இயலாமையைப் பயன்படுத்தி அவர்களுக்கு இழப்பீட்டை வழங்குவதற்கு முற்படுகின்ற அரசாங்கத்தின் நடவடிக்கை வெட்கத்திற்குரியதாகும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் அமைச்சர் அலிசப்ரியின் கருத்தை

15

## பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக திருத்த வேண்டும்!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம்

வாஷிங்டன், பெப். 02

பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்று சர்வதேச அமைப்பான மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

அரசாங்கம் பயங்கரவாத தடை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு கடந்த 27 ஆம் திகதி வர்த்தமானி வெளியிட்டிருந்தது. ஆனால், இது போதுமானதல்ல என்றும், இது சர்வதேசத்தின் அழுத்தங்களை தணிப்பதற்கான அரசின் முயற்சி மட்டுமே என்றும் அந்த அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தின் செயல்பாடுகளால் ஜீ. எஸ். பி. பிளஸ் சலுகை அற்றுப் போகும் சூழ்நிலை

15

## ஹர்த்தால் அழைப்புக்கு விக்னேஸ்வரன் ஆதரவு!

யாழ்ப்பாணம், பெப். 02

"அரசாங்கத்துக்கு உறைக்கும் விதமாக ஹர்த்தால் நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கு எமது ஆதரவை தெரிவித்துக் கொள்கிறோம்", என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்

15



## பலாலி மீனவர்களும் நேற்று போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 02

இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுத்துள்ள வடமராட்சி மீனவர்களின் போராட்டத்துக்கு வலு சேர்க்கும் முகமாகபலாலி, வலளாய் மீனவர்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று செவ்

15

## வடக்கில் நேற்று 26 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், பெப். 02

யாழ்ப்பாணத்தில் 25 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 26 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடத்தில் நடத்தப்பட்ட பி. சி. ஆர். பரி

15

## யாழ்ப்பாணத்திலும் நேற்று மின் வெட்டு!

யாழ்ப்பாணம், பெப். 02

யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் நேற்று செவ்வாய்க்கிழமை ஒரு மணி நேரம் மின்சாரம் தடைப்பட்டது.

நேற்று மாலை 6.30 மணி முதல் 9.30 மணி வரையான நேரத்துக்குள் இந்த மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

15

## கறுப்பு சந்தை விவகாரம் மறுக்கிறது நிதியமைச்சு

கொழும்பு, பெப். 02

யுத்தத்தின் போது கறுப்புச் சந்தை டொலரைப் பயன்படுத்தி வடகொரியாவிடமிருந்து ஆயுதங்களை அரசாங்கம் கொள்வனவு செய்ததாக நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார் என வெளியான செய்தியை அவரின் அமைச்சு மறுத்துள்ளது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் பேசினார் என்று தெரிவித்த அமைச்சு, குறித்த செய்தியில் கூறப்பட்ட கருத்துக்களை அமைச்சர் திட்ட

15




வரலாற்று பிரசித்தி பெற்ற வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் கடந்த ஆண்டுக்கான பெருந் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றதுடன் ஆரம்பமானபோது எடுக்கப்பட்ட படங்கள்.(2)

# இப்படியும் நடக்கிறது...!

இளைஞன் ஒருவனை மனோதத்துவ டாக்டர் ஒருவர் பரிசோதனை செய்தார்.

அவன் எதிரில் ஒரு கோடு வரைந்து “இது என்ன?” என்று கேட்டார்.

“செக்ஸ்” என்றான் அவன்.

வட்டம் வரைந்த அவர் “இது என்ன?” என்று கேட்டார்.

மீண்டும் “செக்ஸ்” என்றே பதில் தந்தான் அவன்.

நட்சத்திரப் படம் வரைந்த அவர், “இது என்ன?” என்று கேட்டார்.

இப்பொழுதும் “செக்ஸ்” என்றே பதில் சொன்னான் அவன்.

பென்சிலை மேசையின் மேல் வைத்த அவர், “நீ எப்பொழுதும் செக்ஸ் பற்றியே நினைத்துக் கொண்டு இருக்கிறாய், அதனால் உனக்கு எல்லாம் செக்ஸாகத் தோன்றுகிறது. இது ஒருவகை மன நோய்” என்றார்.

கோபத்தில் வெடித்த அவன், “எனக்கு அப்படிப்பட்ட நோய் இல்லை. உங்களுக்குத்தான் உள்ளது. இல்லாவிட்டால் அப்படிப்பட்ட படங்களாகவே வரைவீர்களா?” என்று கத்தினான்.

சிவில் சமூகம் என்ற பெயரில் ஒரு நீண்ட அறிக்கை அண்மையில் வெளிவந்திருந்ததை வாசகர்கள் படித்திருப்பீர்கள். ‘ஈழநாடு’இலும் வெளிவந்திருந்தது. அருட்தந்தை ஒருவரும் மற்றுமொருவரும் கையொப்பமிட்ட அந்த அறிக்கை, ஒரு சட்ட ‘மேதை’யிடமிருந்தே ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

அதிலிருந்து அந்த அறிக்கையை தயாரித்தவர் யார் என்பதை ஊகிக்கமுடிந்தது.

இதில் கவனிக்கவேண்டியது, அந்த அறிக்கையை எழுதியவர் எவரோ அவர் தமிழ் கட்சிகள் இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தைப் படித்திருப்பார் என்று தெரியவில்லை.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ. கஜேந்திரன், அரசியல் மேடைகளில் பேசுகின்ற விடயங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு, அறிக்கை தயாரிக்கப்பட்டதோ என்ற எண்ணமே அதனைப் படித்தபோது ஏற்பட்டது.

“.... இந்தியா சீனாவுடனான போட்டியில் தமிழர்களை பாவிக்க முனைவது எமக்கு ஓர் வாய்ப்பை வழங்குகின்றது. ஆனால், அந்த வாய்ப்பை பயன்படுத்தி நாம் இந்தியாவிடம் நிரந்தர தீர்வை - சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டியை வலியுறுத்த வேண்டுமேயன்றி 13ஆம் திருத்தத்தை அல்ல....”, என்கின்றது அந்த அறிக்கை.

“ஒன்றுபட்ட, பிரிக்கப்படாத நாட்டின் கீழ் தமிழ் பேசும் மக்கள் தமது வரலாற்றுச் சிறப்புமிக்க வாழ்விடப் பிரதேசங்களில் கௌரவமாகவும், சுயமரியாதையுடனும், அமைதியுடனும், பாதுகாப்புடனும் வாழவும், அவர்களின் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கவும் வழியேற்படுத்தப்பட வேண்டும் என்று தமிழ்க் கட்சிகளால் இந்தியப் பிரதமருக்கு அனுப்பப்படவுள்ள ஆவணத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.”

மேற்கண்டவாறுதான் அந்த ஆவணத்தை முழுமையாக வெளியிட்ட ஈழநாடு செய்தியாக்கியிருந்தது.

தமிழர்கள் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்க வழியேற்படுத்தப்பட வேண்டும் என்ற விடயம் உள்ளடக்கப்பட்டதாலேயே அதில் கையெழுத்திட மனோ கணேசன் போன்றவர்கள் பின்நின்றதும் பகிரங்கமானதுதான்.

இந்நிலையில், பதின்மூன்றையே தமிழ்க்கட்சிகள் வலியுறுத்தின என்று குற்றம்சாட்டி, தங்களை சிவில் சமூகம் என்று தாங்களே பெயரிட்டு அறிக்கை வெளியிடப்பட்டிருப்பது யாரையோ திருப்திப்படுத்துவதற்காக செய்யப்பட்டதாகவே புரிந்துகொள்ள முடிகின்றது.

முதலில், ஒரு சமூகத்தின் பெயரில் இருவர் மட்டும் இயங்க அனுமதிப்பது ஆரோக்கியமானதா என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

கோட்டாபய அரசு கொண்டுவரவிருக்கும் புதிய அரசியலமைப்பில் பதின்மூன்றில் உள்ள விசயங்களும் இருக்காது என்பதை ஊர்க்குருவி முன்னதாகவே எதிர்வுகூறியிருந்தது. அதனை மெய்ப்பிப்பதாகவே இப்போது செய்திகளும் வந்துகொண்டிருக்கின்றன. இந்நிலையில், அதில் பதின்மூன்றில் உள்ள விசயங்களும் வரும் என்றும், அப்படி வருகின்றபோது தமிழ் கட்சிகளின் பதினொரு எம்.பி.க்களும் ஆதரிப்பார்கள் என்றும் முன்னணியினர் திரும்பத்திரும்பக் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

அப்படியொரு நிலை வந்தால், அவ்வாறு அந்த எம்.பிக்கள் வாக்களித்தால் அவர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும். அதற்காக அவ்வாறுதான் நடக்கும் என்று கூறிக்கொண்டு தொடர்ந்து அதனை விமர்சிப்பது, மேலே சொன்ன, மனோதத்துவ டாக்டரின் வரைபடக் கதையைப் போன்றதேதான்!

**- ஊர்க்குருவி**

# பிரச்னைகளுக்கு இரு மாதத்தில் தீர்வு; இல்லையேல் அரசின் இருப்பு கேள்வி!

கொழும்பு, பெப். 02

சமூக மட்டத்தில் தற்போது தோற்றம் பெற்றுள்ள பிரச்னைகளுக்கு இன்னும் இரு மாத காலத்திற்குள் தீர்வு காணாவிடின் அது அரசியல் இருப்புக்கு தீர்மானமிக்கதாக அமையும் என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

வலுசக்தி துறை அமைச்சு இலங்கை மின்சார சபைக்கு எரிபொருள் விநியோகிப்பதை இடைநிறுத்தியுள்ளதால் நாடு தழுவிய ரீதியில் மின்விநியோகத்தை துண்டிக்க நேரிடும் என இலங்கை மின்சார சபை குறிப்பிட்ட பின்னரே மின்னுற்பத்தி துறையில் மின்சார சபை முன்னெடுக்காத பல விடயங்களை வலுசக்தி அமைச்சு பகிரங்கப்படுத்தியது.

தேசிய மின்விநியோக கட்டமைப்பில் தற்போது தோற்றம் பெற்றுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காணும் யோசனையை நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ விடமும், மின்சாரத்துறை அமைச்சர் காமினி லொகுகேவிடமும் வலுசக்தி அமைச்சர் என்ற ரீதியில் குறிப்பிட்டுள்ளேன்.

மின்விநியோக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு நீண்டகால கொள்கையை அடிப்படையாகக் கொண்ட திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

நெருக்கடியான நிலையின்போது மாத்திரம் தீர்வு காணும் திட்டங்களை செயல்படுத்துவதை மின்சாரசபை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

சுபீட்சமான எதிர்கால கொள்கைக்கமைய அரசாங்கம் செயற்படுகிறதா என்பது சந்தேகத்திற்குரியது - என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ)

# தந்தையை செங்கல்லினால் தாக்கி கொலை செய்த 15 வயது மகன் கைது!

## வெள்ளவாயவில் சம்பவம்

கொழும்பு, பெப். 02

வெள்ளவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹந்தபானாகல, உல்கந்த, பொரளுகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதான ஆர்.எம். ஜயசுந்தர என்பவரை கொலை செய்துள்ளதாக அவரது 15 வயது மகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

செங்கல் சூளையொன்றுக்கு அருகில் செங்கல் குவியலில் விழுந்து காயங்களுக்குள்ளாகியதாக கூறி மொனராகலை

வெல்லவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹந்தபானாகல, உல்கந்த, பொரளுகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதான ஆர்.எம். ஜயசுந்தர என்பவர் கடந்த 30 ஆம் திகதி அவரது மகன் மற்றும் அயலவர்களினால் ஹந்தபானாகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதன் பின்னர் அவர் வெள்ளவாய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில், மேலதிக சிகிச்சைகளுக்காக மொனராகலை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பில் உயிரிழந்த நபரின் மகனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் உயிரிழந்த நபரை செங்கல்லால் தான் தாக்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் கடந்த 30 ஆம் திகதி தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த உளுந்தை பறிக்கச் சென்றுள்ளதுடன் மகனையும் அங்கு வருமாறு கூறிவிட்டு தோட்டத்துக்குச் சென்றுள்ளார் .

இருந்தபோதிலும் அங்கு உயிரிழந்த நபரின் மகன் சென்றிருக்கவில்லை. சிறிது நேரத்தில் வீட்டுக்கு வந்த குறித்த சிறுவனின் தந்தை உளுந்து பறிக்க வரவில்லை என்பதை சுட்டிக்காட்டி மகனை திட்டிவிட்டு கத்தியால் தாக்கியுள்ளார். இந்த தாக்குதலால் மகனின் இடது கையிலுள்ள இரு விரல்களில் காயம் ஏற்பட்டுள்ளது.

அதன் பின்னர் சந்தேக நபரான மகன் செங்கல் சூளையிலிருந்த செங்கல் ஒன்றினால் தந்தையை தாக்கியதாக குறித்த சிறுவன் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இதையடுத்து குறித்த சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரை வெள்ளவாய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மின்வெட்டு இல்லை

கொழும்பு, பெப். 02

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் ஜெனரேட்டர் பழுதடைந்துள்ள காரணத்தினால் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# பாணந்துறையில் துப்பாக்கிச் சூடு; மக்களின் உதவி நாடும் பொலிஸ்

கொழும்பு, பெப். 02

பாணந்துறை ஆதார மருத்துவனைக்கு முன்பாக அம்புலன்ஸ் சாரதியை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்நிலையில், குறித்த இருவரை கண்டுபிடிப்பதற்கு பொதுமக்களின் உதவியை பெறுவதற்கு பொலிஸார் தீர்மானித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, சந்தேக நபர்கள் இருவரின் புகைப்படங்களை ஊடகங்களில் வெளியிடுவதற்கு பொலிஸ் ஊடகப்பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு சந்தேக நபர்கள் தொடர்பில் சரியான தகவல்களை வழங்குபவர்களுக்கு 10 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படவுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் தொடர்பில் தகவல்களை வழங்குவதற்காக பொலிஸ் ஊடகப்பிரிவு விசேட இலக்கங்களை வழங்கியுள்ளது.

பிரதி பொலிஸ்மா அதிபர், மேல்மாகாண குற்றப் பிரிவு - 0718 592686

பணிப்பாளர், களுத்துறை குற்றப்பிரிவு-0718 592745. (அ)

Eelanadu
02.02.2021 புதன்கிழமை
பிலவ வருடம், தை 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 730 1370**

## பீரிஸின் புலமை?

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் அரசியல்வாதிகளுக்கு அறிவுரை வழங்குவதில் துறைசார் நிபுணர்களே முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஏனெனில், அரசியல்வாதிகள் என்போர் எப்போதுமே அடுத்த தேர்தலை இலக்கு வைத்தே செயல்படுவர். இந்த அடிப்படையில் அரசியல்வாதிகளின் சிந்தனை எப்போதும் குறைவாகவே இருக்கும்.

ஆனால், நிபுணர்கள் அவ்வாறானவர்கள் அல்லர். அவர்கள் சரியான விடயங்களை அரசியல் தலைமைக்கு எடுத்துச் சொல்லக் கூடியவர்களாகவே இருப்பர். அப்படித்தான் இருக்கவும் வேண்டும். ஆனால், இலங்கையில் இது தலைகீழாக இருக்கின்றது. படித்தவர்கள் என்று கருதப்படுவர்கள் அரசியல்வாதிகளின் ஊதுகுழல்களாகவே இருக்கின்றனர். இதற்கு பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் மிகச் சிறந்த உதாரணம்.

யாழ்ப்பாணத்தில் நடமாடும் சேவை நடத்திய ஜீ. எல். பீரிஸ் - ஏற்கனவே நடந்த பிரச்னைகளில் நேரத்தை செலவிடுவதில் பயனில்லையென்று தெரிவித்திருக்கின்றார். அதுதான் இந்த அரசாங்காத்தின் நிலைப்பாடு என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது, தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் அனைத்தும் ஏற்கனவே நடந்தவை, இனி அவை பற்றிப் பேசுவதில் பயனில்லை. அடுத்து நடக்க வேண்டியதையே நாம் பார்க்க வேண்டும். இது ஒரு படித்த பேராசிரியர் கூறக்கூடிய வாதமா?

இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டும் என்னும் அடிப்படையில்தான், ஐ. நா. மனித உரிமை பேரவையின் பிரேரணைகள் வலியுறுத்துகின்றன. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அதற்கு செவிசாய்க்க மறுத்த காரணத்தில்தான், அழுத்தங்கள் அதிகரித்தன. இதுவரையில் இலங்கையின்மீது ஏழு அழுத்தப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

இது ஒருபுறம் என்றால் மறுபுறம் குறித்த பிரேரணைகளில் அரசியல் யாப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயமும், மாகாண சபையை வினைத்திறனுடன் இயங்குவதற்கான சூழலை ஏற்படுத்துமாறும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இதனை அரசாங்கம் பொறுப்புடன் மேற்கொண்டிருந்தால், இவ்வாறானதொரு கோரிக்கை வெளியிலிருந்து முன்வைக்கப்பட்டிருக்காதல்லவா! இது பற்றியெல்லாம் சிந்திக்காத பீரிஸ், தமிழ் மக்களுக்கு அறிவுரைகூற முற்படுவது வேடிக்கையானது. தமிழர்களுக்கு அறிவுரை கூறுவதற்கு முன்னர், பீரிஸ் தனது புலமைக்கு நேர்மையானவராக இருக்க முற்பட வேண்டும்.

கடந்த காலத்திற்கு பொறுப்புச் சொல்வது ஓர் அரசாங்கத்தின் கடமை. அதனை புறம்தள்ளுவதானது ஓர் ஆட்சியின் இயலாமையாகும்.

# கிடைக்க முடியாததும் - ஏற்கனவே நடந்து முடிந்ததும்!

**அலசுவது இராஜதந்திரி**

இரு முக்கிய அமைச்சர்கள் கடந்தவாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார்கள். இவர்களில் ஒருவர் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பிரிஸ், மற்றையவர் நீதி அமைச்சர் அலி சப்ரி.

இந்த இரு அமைச்சர்களையும் பொறுத்தவரை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் வடக்கு - கிழக்கு அரசியல் பிரச்னை குறித்து குறிப்பிடத்தக்களவு அனுபவமுடையவராக இருக்கின்றார். நீதி அமைச்சர் அலி சப்ரி அரசியலுக்கு புதியவர் மட்டுமல்ல. வடக்கு - கிழக்கு பிரச்னை குறித்தும் தகுந்த அனுபவத்தை கொண்டிராதிருக்கின்றார்.

இந்த இரு அமைச்சர்களும் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட கடந்த வார விஜயங்களை நோக்கும் போது வடக்கு - கிழக்கு அரசியல் மற்றும் மனிதாபிமான பிரச்னைகள் சம்பந்தமாக அரசாங்கம் கொண்டிருக்கின்ற நிலைப்பாட்டை வடபகுதி மக்களிடம் தெரிவிக்கவே வந்திருந்தார்களோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.

வெளிவிவகார அமைச்சரும் , நீதி அமைச்சரும் யாழ்ப்பாணத்தில் தாம் பங்குபற்றிய ஊடகவியலாளர் மகாநாடுகளில் கருத்து வெளியிட்டபோது யாழ்ப்பாண மக்கள் தமது பலதரப்பட்ட மனிதாபிமானப் பிரச்னைகள் சம்பந்தமாகவும், அரசியல் அபிலாசைகள் சம்பந்தமாகவும் கொண்டிருக்கின்ற எதிர்பார்ப்புகளை மழுங்கடிக்கும் வகையிலான கருத்துக்கண்ணோட்டங்களையே வெளியிட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஜெனிவா விவகாரம் தொடர்பாக கருத்து வெளியிட்டபோது ஏற்கனவே நடந்து முடிந்த பிரச்னைக்காக காலத்தை வீணடிக்க முடியாதென்பதே அரசின் நிலைப்பாடு என குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் மார்ச் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இவ்வாறு கூறியிருப்பது இதவரைகாலமும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் எடுத்துக் கொண்ட விடயங்களை அரச தரப்பு புறந்தள்ளியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இதுதவிர பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் கருத்து வெளியிட்ட போது இலங்கையில் நிலவுகின்ற வடக்கு - கிழக்கு பிரச்னை ஓர் உள்நாட்டு பிரச்னை எனவும் நீண்ட காலமாகவே இடம்பெற்ற பிரச்னை எனவும் தெரிவித்துள்ளதோடு ஏனைய உலக நாடுகளின் பிரச்னைகளோடு ஒப்பிடுகையில் இலங்கை அதிக பிரச்னைகளை கொண்டிராத நாடாகவே இருக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டமைச்சராக இருக்கின்ற பேராசிரியர் ஜீ. எல். பீரிஸின் இக்கூற்றை நோக்கும்போது அவர் எந்த உலகில் இருக்கின்றார் என்ற கேள்வியே எழுவதாக இருக்கின்றது. அத்துடன் அரசு சார்பாக நோர்வே வடக்கு - கிழக்கு பிரச்னை குறித்து மேற்கொண்ட சமரச முயற்சிகளில் பங்கேற்றவரான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் கூறுகின்ற அபிப்பிராயங்களா இவை என்று வியக்குமளவிற்கு அவர் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தவை விளங்குகின்றன.



இலங்கையில் மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற கொடிய உள்நாட்டு யுத்தம் அதனால் ஏற்பட்ட பெரும் மனித அவலங்கள் என்பற்றை நன்கறிந்த நிலையில் உலகில் இடம்பெற்ற ஏனைய நாடுகளின் பிரச்னைகளோடு ஒப்பிடுகையில் இலங்கையில் இடம்பெற்றவை பாரதூரமானவையல்ல எனவும் பேராசிரியர் பீரிஸ் கூறியிருப்பதை நோக்கும்போது “முழுப் பூசணியை சோற்றில் மறைக்க“ அவர் முயல்வது போன்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றது.

ஏனெனில், இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசப்த கால வடக்கு - கிழக்கு பிரிவினைவாத யுத்தம் ஆசிய பிராந்தியத்தில் இடம்பெற்ற மிக நீண்டகால உள்நாட்டு யுத்தங்களில் ஒன்றாகவே வரையறை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உட்பட உலகில் முக்கிய அரங்குகள் பலவற்றிலும் எதிரொலித்த பிரச்னையாகவே இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரச்னை விளங்குகின்ற நிலையில் அந்தப் பிரச்னையை சர்வசாதாரணமாக வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளமை இலங்கை அரசின் வடக்கு - கிழக்கு பிரச்னை குறித்து அசமந்த போக்கையே வெளிப்படுத்துவதாகவே இருக்கின்றது.

இதேவேளை, நீதி அமைச்சர் அலி சப்ரி காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்னை குறித்தும் 13ஆவது திருத்தச்சட்டம் குறித்தும் கருத்து வெளியிட்டபோது கிடைக்க முடியாதவைக்காக குரல் கொடுப்பதில் பயனில்லை எனக்குறிப்பிட்டுள்ளார். கிடைக்க முடியாதவை என்று நீதி அமைச்சர் தெரிவித்ததை நோக்கும் போது காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய விவகாரத்தை மறந்து விடவேண்டியுள்ளதோ என்ற அபிப்பிராயமே ஏற்படுகின்றது.

அத்துடன், 13ஆவது திருத்தச்சட்டத்தில் இருப்பவை முற்று முழுதாக வழங்கப்படமுடியாதவை என்ற செய்தியைக் கூட வழங்குவதாகவும் இருக்கின்றது என்பதையே நீதி அமைச்சர் கூறியதன் மூலம் அறிந்த கொள்ள முடிகின்றது.

இந்நிலையில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் மற்றும் நீதி அமைச்சர் அலிசப்ரி ஆகியோர் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தவை வடக்கு-கிழக்கின் அரசியல் மற்றும் மனிதாபிமான பிரச்னைகள் குறித்த அரச தரப்பின் நிலைப்பாட்டை அழுத்தம் திருத்தமான இடித்துரைப்பனவாகவே இருக்கின்றன.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பெப்ரவரி - 02 புதன்கிழமை
பிலவ வருடம் - தை 20
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : துவிதியை




**மேடம்**
பணியிடத்தில் உங்களின் உழைப்பிற்கேற்ற ஊதிய உயர்வு கிடைக்கும். நல்ல விஷயம் ஒன்றை துணிந்து செய்து வெற்றி காண்பீர்கள். சுபச்செலவுகள் வரும். பழைய முதலீடு லாபம் அளிக்கும்.

**இடபம்**
சற்றும் எதிர்பாராத நன்மை ஒன்று வருவதால் மகிழ்வீர்கள். குடும்பத்தினர் உங்களுக்கு ஆதரவாக இருப்பதால் நிம்மதி ஏற்படும். பேச்சில் கவனமும் செயலில் நிதானமும் வேண்டும்.

**மிதுனம்**
புதிய முடிவு எடுக்கும்போது இரு முறை யோசிக்கவும். யாரையும் வீணாகப் பகைத்துக் கொள்ளா திருப்பது நல்லது. தொழில், பணியில் ஓரளவு முன்னேற்றம் உண்டாகும்.

**கடகம்**
பெரியவர்களுக்கு உதவி செய்து அவர்களின் ஆசியைப் பெறுவீர்கள் குடும்பத்தில் உள்ள இளம் வயதினரிடம் முன்னேற்றங்கள் ஏற்படும். நீண்ட நாளாக மனதில் இருந்து வந்த கவலை ஒன்று தீரும்.

**சிம்மம்**
வீட்டில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் துவங்கும். குடும்பத்தினர் பெருமை சேர்க்கும் வகையில் நடந்து கொள்வார்கள். எதிர்பார்த்த நன்மை கிடைக்கப்பெற்று மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கன்னி**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்ச்சி அடைவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த தொகை ஒன்று கிடைக்கும். நிம்மதி மீளும். அவசியமற்ற செலவுகளை குறைத்துக் கொள்வது நல்லது.

**துலாம்**
எதிர்பாராத நற்செய்தி ஒன்று வந்து மகிழ்ச்சியில் திக்குமுக்காட வைக்கும் குடும்பத்தினரால் சந்தோஷம் ஏற்படும். சேமிப்பு அதிகரிக்கும். பணவரவு கூடும். உறவினர்கள் மூலம் உதவி கிடைக்கும்.

**விருட்சிகம்**
நண்பர்களின் சந்திப்பு உங்களுக்கு பெரிதும் உதவும். பயம் நீங்கும். வெளி மனிதரால் ஏற்பட்டு வந்த பிரச்னை ஒன்று நீங்கும். கோபத்தை கட்டுப்படுத்துவது நல்லது. பேச்சில் கவனம்

**தனுசு**
பணியிடத்தில் இருந்து வந்த பிரச்னை ஒன்று முடிவுக்கு வரும். நன்மை ஒன்று நிகழ்வதால் மனதில் பரபரப்பு கூடும். மூத்தோரின் ஆரோக்கியத்தில் ஏற்பட்டிருந்த பாதிப்புகள் நீங்கும்.

**மகரம்**
கடந்த சில நாட்களாக இருந்து வந்த சிக்கல்கள் தீரும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்பு வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும் தேவையற்ற செலவுகளைக் குறைப்பது நல்லது.

**கும்பம்**
சகபணியாளர்கள் உங்களுக்கு நன்கு ஒத்துழைப்பு தருவார்கள். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நீண்ட நாள் பிரச்னை ஒன்று முடிவுக்கு வரும்.

**மீனம்**
உடல் ஆரோக்கியத்தில் ஏற்பட்டிருந்த பாதிப்புகள் நீங்கும். கடந்த சில நாட்களாக இருந்த சிக்கல்கள் நீங்கும். தொழில் பற்றிய புதிய முயற்சியை நன்கு ஆராய்ந்து செய்யவும்.

# பா.ஜ.க. தொண்டர்களுக்காகவே தனித்து போட்டியிட முடிவு!

## வானதி சீனிவாசன் விளக்கம்

சென்னை, பெப் 02,
அதிமுகவினர் தங்களின் மதிப்புமிக்க கூட்டாளிகள் எனவும், இரு கட்சியினரும் தொண்டர்களுக்கு வாய்ப்பளிக்கவே தேர்தலில் தனித்துப் போட்டியிட முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் பா.ஜ.க. தேசிய மகளிரணி தலைவரும், எம்.எல். ஏவுமான வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம், "அதிமுகவை நாங்கள் மதிக்கிறோம். அவர்கள் எங்களின் மதிப்பு மிக்க கூட்டாளிகள். அ.தி.மு.க., பா.ஜ.க. ஆகிய இரு கட்சியினரும் நகர்புற உள்ளாட்சித் தேர்தலில் தங்கள் தொண்டர்களுக்கு



வாய்ப்பு அளிக்க வேண்டிய நிலை உள்ளது. எனவே, தனித்துப் போட்டி என முடிவெடுக்க வேண்டிய நிலை ஏற் பட்டது" என்று அவர் கூறினார்.

அரியலூர் பள்ளி மாணவி தற்கொலை வழக்கை சி.பி.ஐ. விசாரிக்க சென்னை உயர் நீதி மன்றத்தின் மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது. இந்தத் தீர்ப்பை மனதார வரவேற்கிறோம். மாணவி இறக்கும் முன் அளித்த வாக்குமூலத்தில், அந்தப் பள்ளியைச் சேர்ந்த ஒரு சிலர் தன்னை மதமாற்றம் செய்ய முயன்றதாக குற்றம் சாட்டியுள்ளார்.

அந்த மாணவி மதமாற்றத்தை பற்றி பேசியுள்ளார். ஆனால், அங்கு இருக்கும் காவல்துறை உயர் அதிகாரி, "மதமாற்றம் அங்கு நடக்கவே இல்லை. வீடியோவில் உண்மை இல்லை. என எந்த விசாரணையும் இல்லாமல் தானாக சான்று அளிக்கிறார்" எனவும் அவர் தெரிவித்தார்.

# கட்டாய மதமாற்ற தடை சட்டத்தை கொண்டு வரக் கோரி மனு தாக்கல்

மதுரை, பெப். 02,
இந்தியா முழுவதும் கட்டாய மதமாற்ற தடை சட்டத்தை கொண்டு வர வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகே உள்ள மைக்கேல்பட்டி தூய இருதய மேல்நிலைப்பள்ளி விடுதியில் தங்கி 12ஆம் வகுப்பு படித்து வந்த மாணவி தற்கொலை செய்துகொண்டார். தன்னுடைய மகளை மதம் மாத கட்டாயப்படுத்தியதால் தற்கொலை செய்துகொண்டதாக பெற்றோர் தரப்பில் புகார் கூறப்பட்டது.

மாணவி தற்கொலை விவகாரம் தொடர்பாக தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் வெடித்தன. இதையடுத்து, தஞ்சை மாணவியின் தற்கொலை வழக்கை சிபிஐக்கு மாற்றி உயர் நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில், தஞ்சை மாணவி தற்கொலை வழக்கை என்ஐஏ விசாரிக்க வேண்டும் என்றும், நாடு முழுவதும் கட்டாய மதமாற்ற தடை சட்டத்தை கொண்டு வர வேண்டும் எனவும் வழக்கறிஞர் அஸ்வினி உபாத்யாயா உயர் நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

# அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து பா.ஜ.க. வெளியேறியது ஏன்?

## ஜெயக்குமார் விளக்கம்

சென்னை, பெப். 02,
"அதிகப்படியான இடங்களை உங்களுக்கு தர முடியாத நிலையில் இருக்கிறோம் என்று கூறினோம். இதையடுத்து அவர்கள் ஒரு முடிவு எடுத்தார்கள்" என அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து பா.ஜ.க. வெளியேறியது ஏன்? என்பதற்கு ஜெயக்குமார் விளக்கம் அளித்துள்ளார்.

அ.தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகித்த பா.ஜ.க. நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்துள்ளது. இதுகுறித்து அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

ஒவ்வொரு கட்சிகளுக்கும் எதிர்பார்ப்பு இருக்கும். எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் அளவுக்கு எங்களுடைய கட்சியின் நலனையும், கட்சியினரின் நலனையும் மிக உன்னிப்பாக கவனிக்கவேண்டியது முக்கியம். இதனால்தான் அவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றமுடியாத சூழ்நிலையில் தான், எங்களுடைய நிலைமையை சொன்னோம்.

அதிகப்படியான இடங்களை உங்களுக்கு தர முடியாத நிலையில் இருக்கிறோம் என்று கூறினோம். இதையடுத்து அவர்கள் ஒரு முடிவு எடுத்தார்கள். இது அவர்கள் கட்சி எடுத்த முடிவு.

இதுபற்றி நான் கருத்து கூறவிரும்பவில்லை. நாங்கள் தனித்தன்மையோடு பல தேர்தல்களை சந்தித்து இருக்கிறோம். அதேபோன்று இந்த தேர்தலிலும் எங்களுக்கு இருக்கும் தனித்தன்மை, அடையாளத்தோடு மாபெரும் வெற்றியை பெறுவோம்" என அவர் கூறினார்.

# தி.மு.க. கூட்டணியின் முதலாவது வேட்பாளர் பட்டியல் வெளியானது

## ஸ்டாலினிடம் அதிருப்தி வெளியிட்ட துரை வைகோ

சென்னை, பெப் 02,
தை அமாவாசை நாளான நேற்று முன்தினம் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கான முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை திமுக, பாமக, தேமுதிக, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகள் வெளியிட்டிருக்கின்றன.

தி.மு.க. கூட்டணியில் கூட்டணி வெளியிட்ட பட்டியலால் கட்சிகளுக்கு அந்தந்த மாவட்டங்களில் நடந்த இடப்பங்கீடு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில்நேற்று ம.தி.மு.கவுடனான இடப்பங்கீட்டிலும் பல மாவட்டங்களில் மாநகராட்சிகளில் அதிருப்தி ஏற்பட்டது.சென்னையில் ம.தி.முகவுக்கு இரு இடங்கள் மட்டுமே ஒதுகப்பட்டுள்ளது,

சில மாவட்டங்களில் திமுக - ம.தி.மு.க. பேச்சுவார்த்தை உடன்பாடு எட்ட முடியாமல் போனது. கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ கொரோனா தாக்கத்தால் தனிமைப்படுத்திக் கொண்டிருக்கும் நிலையில் அவர் மகனும் ம.தி.மு.க. தலைமைக் கழகச் செயலாளருமான துரை வைகோ அவசரமாக தி.மு.க. தலைவரும் முதல்வருமான ஸ்டாலினை சந்தித்தார்.

சென்னை, தூத்துக்குடி மாநகராட்சி உட்பட பல இடங்களிலும் மதிமுகவுக்கு உரிய இடங்கள் ஒதுக்கப்படவில்லை என்றும் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுமாறு மாவட்டச் செயலாளர்கள் வற்புறுத்தி வருவதாகவும் தி.மு.க. தலைவர் ஸ்டாலினிடம் முறையிட்டிருக்கிறார் துரை வைகோ. தான் இதுகுறித்து கவனிப்பதாகச் சொல்லி அவரை அனுப்பி இருக்கிறார் ஸ்டாலின்.

# சைபிரஸிலிருந்து மசகு எண்ணெய்!

## கொள்வனவு செய்ய அரசு நடவடிக்கை

கொழும்பு, பெப். 02

**சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புக்கு தேவையான மசகு எண்ணெயை எதிர்வரும் ஜூலை மாதம் வரைக்கும் விநியோகிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதன் பின்னர் வரும் காலங்களுக்குத் தேவையான மசகு எண்ணெய்யை விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

இச்சுத்திகரிப்புக்குத் தேவையான மசகு எண்ணெய்யை விநியோகிப்பதற்காக, சைப்பிரஸ் நாட்டு நிறுவனத்திடம் கோரப்படாத முன்மொழிவொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

180 நாட்கள் கடன் அடிப்படையில் மசகு எண்ணெய்யை விநியோகிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவை அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிரந்தர பெறுகைக் குழுவின் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அதன் ஆரம்ப கட்டமாக 4 இலட்சத்து 50 ஆயிரம் பீப்பாய்கள்கொண்ட தொகையை விநியோகிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அப்பரிந்துரைகளுக்கமைய குறித்த மசகு எண்ணெயை விநியோகிப்பதற்காக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# தனியார்துறையினருக்கும் ஓய்வூதியக் கொடுப்பனவு?



கொழும்பு, பெப். 02

அரச ஊழியர்கள் மற்றும் அரச துறையில் ஓய்வு பெற்றவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை தனியார்துறை ஊழியர்களுக்கும் பெற்றுக் கொடுப்பதற்காக தொழில்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அரசாங்கத்திடம் ஆலோசனை கேட்டுள்ளார்.

இது சம்பந்தமாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, அமைச்சரவைக்கு யோசனை ஒன்றையும் முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கொடுப்பனவை பெற்றுக்கொடுப்பதற்காக, தனியார் பிரிவின் தொழில் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் முதலாளிமார்களுடன் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த கொடுப்பனவைப் பெற்றுக்கொடுப்பதற்கு தொழிற் சங்கத்தினர் சம்மதம் தெரிவித்துள்ளபோதிலும், தனியார் பிரிவின் முதலாளிமார்கள் இதுவரை சம்மதிக்கவில்லை என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார். (அ)

# கொழும்பு துறைமுக மின்னுற்பத்தி நிலையத்தின் செயல்பாடு பாதிப்பு

கொழும்பு, பெப். 02

கொழும்பு துறைமுகத்தில் உள்ள மின்னுற்பத்தி நிலையத்திற்கான எரிபொருள் பற்றாக்குறை காரணமாக நேற்று முன்தினம் பிற்பகல் முதல் அதன் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக தேசிய மின்கட்டமைப்பில் 60 மெகாவோட் மின்சாரத்துக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மேற்படி மின்முனையத்துக்கு தேவையான 500 மெற்றிக் தொன் எரிபொருள் வழங்கப்படும் என சக்திவலு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த எரிபொருள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் கொழும்பு துறைமுகத்தில் உள்ள மின்னுற்பத்தி நிலையத்தின் செயல்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் லக்விஜய முனையம் மீண்டும் செயல்பட ஆரம்பித்தமையை அடுத்து தேசிய மின்கட்டமைப்பில் 300 மெகாவோட் மின்சாரம் இணைக்கப்பட்டுள்ளதாக மின்சார பொறியியலாளர்கள் தெரிவித்தனர். (அ)

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு 19 வயது இளைஞர் உயிரிழந்தார்

கொழும்பு, பெப். 02

மாலபே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலங்கம வடக்கு பகுதியில் நேற்று முன்தினம் மாலை இருவருக்கு இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இருவருக்கு இடையிலான தகராறு முற்றிய நிலையில், சந்தேக நபர் கூரிய ஆயுதத்தால் தாக்கியதால் பலத்த காயமடைந்த குறித்த நபர் கொஸ்வத்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

வடக்கு மாலபே பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஏற்றவாறு தொழிற்கல்வி கற்கைகளை ஆரம்பியுங்கள்

## அரச நிறுவனங்களுக்கு பிரதமர் ஆலோசனை



கொழும்பு, பெப். 02

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு ஏற்ற வகையில் தொழில்சார்ந்த தொழிற்கல்வி கற்கைநெறிகளை ஆரம்பிக்குமாறு தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை முன்னெடுக்கும் அரச நிறுவனங்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதிகமான இளைஞர் யுவதிகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இதனை குறிப்பிட்டார்.

தொழில்முறை மட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் பாடசாலையிலிருந்து விலகி வெளிநாடு செல்லும் இளைஞர், யுவதிகளை அங்கு திறமையான தொழிலாளர்களாக பணிபுரிவதற்கு வழியேற்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

திறமையுள்ளபோதிலும் பயிற்சிச் சான்றிதழ் அற்றவர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபடுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தையையும், இந்நாட்டு இளம் சமூகத்தினரையும் இணைக்கக்கூடிய ஒரு முறைமையை உருவாக்குவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவால் தற்போது வேலைவாய்ப்புகள் உள்ள நாடுகள் மற்றும் வெற்றிடங்கள் காணப்படும் துறைகள் தொடர்பில் பிரதமருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இளைஞர் விவகார அமைச்சு மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சு ஆகியன ஏற்கனவே இளைஞர் யுவதிகளுக்காக தொழில்சார் துறைகளை உள்ளடக்கும் வகையிலான வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை இலக்காகக் கொண்ட தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை ஆரம்பித்துள்ளதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

கடந்த 26ஆம் திகதி வரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுமதி பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வேலைவாய்ப்புகளில் ஜப்பான், தென்கொரியா, இத்தாலி, ருமேனியா, டோஹா கட்டார் உள்ளிட்ட 22 நாடுகளில் 183198 வேலைவாய்ப்புகளுக்கு பணியாளர்களை ஈடுபடுத்துவதற்கு தேவை உள்ளதாக மேற்படி கலந்துரையாடலின்போது கருத்து தெரிவிக்கப்பட்டது. (அ)

# நீண்ட வார இறுதி விடுமுறை சுகாதார தரப்பு எச்சரிக்கை

கொழும்பு, பெப். 02

சுதந்திர தினத்துடன் ஆரம்பமாகும் நீண்ட வார இறுதி விடுமுறை தொடர்பில் சுகாதார தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்ட வார இறுதி விடுமுறைக் காலத்தில் சன நெரிசல் மிக்க இடங்களுக்கு செல்வதனை தவிர்த்துக் கொள்ளுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் இது குறித்து அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

வார இறுதி நாட்களில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் பயணங்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சுற்றுலா செல்லும் நபர்கள் மிகுந்த சன நெரிசல் மிக்க இடங்களை தவிர்க்குமாறு அவர் கோரியுள்ளார்.

இலங்கையில் 15 மில்லியன் பேர் இரண்டு டோஸ் கோவிட் தடுப்பூசிகளை ஏற்றிக் கொண்டுள்ளபோதிலும், பலர் மூன்றாம் டோஸ் அல்லது பூஸ்டர் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளவில்லை என மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். (அ)

# பஸில் விடுதலை!

கொழும்பு, பெப். 02

திவிநெகும, நிதி மோசடி குற்றச்சாட்டு தொடர்பான மற்றுமொரு வழக்கிலிருந்து நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விடுதலை செய்யப்பட்டார். 2015 ஜனாதிபதித் தேர்தலின்போது, திவிநெகும அபிவிருத்தி நிதியத்துக்கு சொந்தமான 2,292 மில்லியன் ரூபாயை முறைகேடாக பயன்படுத்தி நாட்காட்டி அச்சிடப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்நிலையில் குறித்த வழக்கில் இருந்து திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்கவும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த முன்னிலையில் விசாரணை இடம்பெற்ற நிலையில் சாட்சிகளை அழைக்காமல் பிரதிவாதிகள் விடுவிக்கப்பட்டனர். (அ)

# 40,000 மெற்றிக்தொன் டீசலை இந்தியாவிடம் வாங்கும் அரசு

## அமைச்சரவையில் தீர்மானம்

கொழும்பு, பெப். 02

**இந்தியன் எண்ணெய் நிறுவனத்திடமிருந்து 40,000 மெற்றிக்தொன் டீசல் மற்றும் 40,000 மெற்றிக்தொன் பெற்றோலை கொள்வனவு செய்வது தொடர்பாக எரிசக்தி அமைச்சு குறித்த கம்பனியுடன் கலந்துரையாடலை நடத்தியுள்ளது.**

அதற்கமைய, 40,000 மெற்றிக்தொன் டீசல் தொகையை விநியோகிப்பதற்கு இந்தியன் எண்ணெய் நிறுவனம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

இதனை கொள்வனவு செய்வதற்கான வருங்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# சுற்றுலா தலமாகும் காலித் துறைமுகம்

கொழும்பு, பெப். 02

காலியில் தற்போது உள்ள துறைமுகத்தைச் சுற்றுலாப் பயணிகளுக்கான துறைமுகமாக மாற்றுவதற்குத் துறைமுக அதிகார சபை திட்டமிட்டுள்ளது.

இந்த திட்டத்தை முன்னெடுப்பதற்கு 17 கோடியே 50 லட்சம் அமெரிக்க டொலர் முதலீடு செய்ய முதலீட்டாளர்களின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது.

உல்லாசப் பயண கப்பல்களுக்கான 150 மீற்றர் நீளத்தைக் கொண்ட நவீன இறங்குதுறை உட்படப் பல நவீன அமைப்புக்களை அங்கு நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்துக்காகத் துறைமுகத்தை அண்டியுள்ள மேலும் 40 ஹெக்ரேயர் நிலப் பரப்பில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் செயல்படத் தொடங்கியதும், ஏராளமான சுற்றுலாப்பயணிகளை நாட்டுக்கு ஈர்க்க முடியும் எனவும் துறைமுக அதிகார சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (அ)

# ஆரம்பப் பிரிவு பாடசாலைளுக்கு விடுமுறை வழுங்கப்படமாட்டாது

கொழும்பு, பெப். 02

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின்போது ஆரம்பப் பிரிவு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படமாட்டாது எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இம்மாதம் 7ஆம் திகதி முதல் மார்ச் 5ஆம் திகதி வரை நடைபெறும் என பாடசாலை விவகார மேலதிக செயலாளர் இ.டபிள்யு.எல்.கே. எகொடவெல தெரிவித்தார்.

எவ்வாறாயினும் அந்த காலப்பகுதியில் ஆரம்பப் பிரிவுகளுக்கு விடுமுறை வழங்கப்படமாட்டாது என அவர் கூறினார்.

பரீட்சை சூழலைப் பேணுவதற்கு இடையூறான பாடசாலையாக இருந்தால் சம்பந்தப்பட்ட பாடசாலையின் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறான பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகளுக்கு விடுமுறை வழங்குவதற்கும் குறித்த பாடசாலைகளுக்கு உரிய பணியிடங்களை பரிந்துரைப்பதற்கும் கற்றல் முறைகளை மேற்கொள்வதற்கும் கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதாகவும் அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# இ.போ.ச ஊழியர்களும் ரூ.5000 கொடுப்பனவு கோருகிறார்கள்

கொழும்பு, பெப். 02

ஜனாதிபதி உடனடியாக தலையிட்டு இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவை வழங்குமாறு அகில இலங்கை போக்குவரத்து ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

2018 ஆம் ஆண்டு முதல் அமுலுக்கு வரும் வகையில் சம்பள அதிகரிப்பு, 2018 ஆம் ஆண்டு முதல் அமுலுக்கு வரும் வகையில் உத்தியோகத்தர்களின் சம்பள திருத்தம் மற்றும் சம்பள நிலுவைகளை தீர்வளிக்கவேண்டும் என்பன உள்ளிட்ட பல கோரிக்கைகளுக்கு தீர்வை பெற்றுத்தருமாறு சங்கத்தின் தலைவர் சேபால லியனகே கோரியுள்ளார்.

தமது கோரிக்கைகளுக்கு தீர்வை வழங்குவதற்கு தலையிடாவிடின் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக லியனகே கூறினார்.

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

5,000 கொடுப்பனவு சபைகள் உட்பட அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என அரசாங்கம் தெரிவித்தபோதிலும் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு கொடுப்பனவு வழங்குவது தொடர்பில் எந்த முடிவும் எட்டப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# இளநீரில் மயக்க மருந்து கலந்துவிட்டு ஓட்டோ சாரதியின் சங்கிலி அபகரிப்பு

கொழும்பு, பெப். 02

இளநீரில் மயக்க மருந்தை ஊற்றி ஓட்டோச் சாரதி ஒருவரின் தங்க சங்கிலியை அபகரித்து சென்ற சம்பவம் ஒன்று பலாங்கொடை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

பலாங்கொடை நகரில் உள்ள ஓட்டோ தரிப்பிடம் ஒற்றிலிருந்து ஓட்டோவில் வாடகைக்கு பயணித்த நபரொருவர் பெல்மடுல்ல நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் ஹொரகெட்டிய என்ற இடத்தில் ஓட்டோவை நிறுத்துமாறு கோரி இவ்வாறு தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளார்.

பயணத்தின்போது இடைநடுவே ஓட்டோவை நிறுத்தச் சொன்ன பயணி, அங்கு இளநீர் விற்பனை செய்த நபரிடம் இளநீர் இரண்டை விலை கொடுத்து வாங்கி ஒன்றை ஓட்டோச் சாரதிக்கு வழங்கியுள்ளார்.

அதன் பின்னர் நடந்த சம்பவங்கள் அனைத்தும் ஓட்டோச் சாரதி வைத்தியசாலையில் மயக்கத்திலிருந்து மீண்ட பின்னரே நினைவுக்கு வந்துள்ளது.

இளநீரை அருந்திய பின் அவருக்கு மயக்க நிலை ஏற்பட்டதாகவும், நடந்த எதனையும் அறியாத சாரதி பிரதேச மக்கள் சிலர் தன்னை வைத்தியசாலையில் சேர்த்த சம்பவத்தை பின்னரே அறிந்ததாகவும் கூறினார்.

ஓட்டோச் சாரதி நடந்த விடயங்கள் தொடர்பிலும் தனது கழுத்தில் இருந்த இரண்டு பவுன் தங்கச்சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ள விடயத்தையும் பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (அ)

# 260 மில்லியன் டொலர்கள் மோசடி; 2 வர்த்தகர்கள் குறித்து விசாரணை

கொழும்பு, பெப். 02

பொருட்களை இறக்குமதி செய்வதாகக் கூறி 260 மில்லியன் அமெரிக்க டொலர்களை மோசடியான முறையில் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்த வர்த்தகர்கள் இருவர் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் புத்திக சி. ராகலவிடம் இந்த தகவல்களை தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

நூரா மல்டி ட்ரேடர்ஸ் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றின் ஊடாக பேரீச்சம்பழம், தங்கம் உள்ளிட்ட பொருட்களை இறக்குமதி செய்வதாக இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு டொலர்களை வர்த்தகர்கள் இருவரும் அனுப்பியுள்ளதாக தெரியவந்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

இதன்படி, 2006 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்தனர்.



# பஸ்-டிப்பர் மோதி விபத்து; 12 பேர் காயம்

கொழும்பு, பெப். 02

கொழும்பு-ஹொரணை பிரதான வீதியில் கும்புக சந்தி பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை விபத்து ஏற்பட்டது.

ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று டிப்பர் ரக வாகனத்துடன் மோதி இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் டிப்பர் சாரதி உட்பட 12 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# நல்லாட்சி இருந்திருப்பின் கொரோனா கட்டுக்குள்!

## ராஜித சேனாரத்ன கூறுகிறார்



கொழும்பு, பெப். 02

நல்லாட்சி அரசாங்கம் இருந்திருந்தால் கொரோனா தொற்றினால் மக்கள் இவ்வளவு துன்பங்களை அனுபவித்திருக்கமாட்டார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நாட்டில் பதிவாகியுள்ள 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொரோனா இறப்புகளுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நாட்டில் கொரோனாவை இல்லாதொழிக்கும் முயற்சி முற்றிலும் தோல்வியடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பாடசாலை மாணவர்கள் மத்தியில் தொற்று நோய் பரவும் அபாயம் தற்போது காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ).



# காலியில் முழுக் குடும்பத்தையுமே பலியெடுத்த ஓட்டோ-ரயில் விபத்து!

கொழும்பு, பெப். 02

காலி மாவட்டம் வெல்லப்பட ரயில் குறுக்கு வீதியில் ஓட்டோ மீது ரயில் மோதியதில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

ரயில் கடவையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

சம்பவத்தில் உடனடியாகவே மூவர் உயிரிழந்த நிலையில் ஒருவர் படுகாயம் அடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய், மகன், மருமகள் என்று தெரியவந்துள்ளது.

வெள்ளபாடை, பூஸ்ஸ பிரதேசத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் ஓட்டோவில் சென்றபோது விபத்து நிகழ்ந்தது. (அ)

# மேலதிக வகுப்புக்களுக்கு நேற்று நள்ளிரவு முதல் தடை

கொழும்பு, பெப். 02

உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் 07ஆம் திகதி தொடங்கவுள்ள நிலையில் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் மற்றும் மேலதிக வகுப்புகளுக்கு நேற்று நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைவாக துறைசார் விரிவுரையாளர்கள், கருத்தரங்குகள் மற்றும் வகுப்புக்களை நடத்துவதும், பரீட்சையை இலக்காகக் கொண்ட வினாத்தாள்களை அச்சிடுவதும், பகிர்ந்தளிப்பதும், இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக விளம்பரப்படுத்துவதும், பரீட்சை இடம்பெறுவதற்கு 5 நாட்களுக்கு முன்னர் இவ்வாறான வினாத்தாள்கள் வழங்கப்படுமென சுவரொட்டிகள் மற்றும் பனர்கள் மூலம் அறிவிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒழுங்கு விதிகளை மீறுவோர் தொடர்பில் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது பரீட்சைத் திணைக்களத்துக்கு முறைப்பாடு செய்ய முடியும்.

இதேவேளை, கோவிட் தொற்றுக்கு உள்ளான மாணவர்களுக்கு வசதியாக 29 வைத்தியசாலைகளில் உயர்தரப் பரீட்சை மத்திய நிலையங்கள் நிறுவப்படும். கோவிட் தொற்றுக்கு உள்ளான மாணவர்கள் இந்த பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாணய நிதியத்தை நாடுவதற்கு தயார்!

## அமைச்சரவை பேச்சாளர் அறிவிப்பு

**கொழும்பு, பெப். 02**

**நாட்டின் கடனை மறுசீரமைக்க சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் தயாராக இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்விடயம் விவாதிக்கப்படவில்லை என்றாலும் இது குறித்து பேசப்பட்டதாக அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் பெறப்பட்ட பெரும்பான்மையான கடனை மீள்கட்டமைப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடியதாக அவர் கூறினார்.

இதேவேளை, தற்போது நாட்டில் நிலவும் நெருக்கடியை சுமார் ஆறு மாதங்களுக்குள் சமாளிக்க முடியும் என நம்புவதாகவும் ரமேஷ்பத்திரன தெரிவித்தார். (அ)

# அதிகளவான வருமானம் ஈட்டும் தனிநபர்களுக்கும் மேலதிக வரி!

கொழும்பு, பெப். 02

2000 மில்லியனுக்கும் அதிகமான வருமானம் ஈட்டும் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு மேலதிக வரி விதிக்கும் சட்டமூலம் ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அனுமதி கோரி நிதி அமைச்சரினால் அமைச்சரவைப் பாத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் நேற்றுக் காலை வழங்கப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் கூறினார்.

சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குமாக முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# வெல்லம்பிட்டியில் துப்பாக்கிச் சூடு ஒருவர் காயம்

கொழும்பு, பெப். 02

வெல்லம்பிட்டி-சாலமுல்ல-கமகேவத்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு மேட்டார் சைக்கிளில் வந்த சந்தேக நபர்கள், துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# கிளிநொச்சியில் 4 நாள்களில் 200 கோவிட் தொற்றாளர்கள்

கிளிநொச்சி, பெப். 02

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மாவட்ட தொற்று நோயியலாளர் வைத்தியர் நிமால் அருமைநாதன் தெரிவித்தார்.

கடந்த நான்கு நாள்களில் மாத்திரம் சுயமாக முன்வந்து தங்களைப் பரிசோதனை செய்தவர்களில் 200 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவர்களில் 50 பேர் மாணவர்களாக காணப்படுவதோடு, 16 வயதுக்குட்பட்டவர்கள் 43 பேரும் உள்ளடங்குகின்றனர். அத்தோடு, கர்ப்பிணித் தாய்மார்கள் இருவரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனவும் வைத்தியர் நிமால் அருமைநாதன் கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது கொரோனா தொற்றுப் பரவும் வேகம் அதிகரித்துக் காணப்படுகின்றமையால், பொதுமக்கள் கண்டிப்பாக சுகாதார நடைமுறைகளை முறையாகக் கடைபிடிக்கவேண்டும். 1ஆம், 2ஆம் மற்றும் பூஸ்டர் தடுப்பூசிகளைச் செலுத்தாதவர்கள் அவற்றை உடனடியாக செலுத்த வேண்டும்-என்றார். (அ)

# ஜனவரியில் பணவீக்கம் 14.2 வீதமாக அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 02

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கு அமைய கடந்த 2021 டிசெம்பரில் 12.1 வீதமாக இருந்த பணவீக்கமானது 2022 ஜனவரியில் 14.2 வீதமாக அதிகரித்துள்ளது.

உணவு மற்றும் உணவு அல்லாத வகைகளின் மாதாந்த விலை உயர்வால் பணவீக்கம் அதிகரித்துள்ளது.

அதைத் தொடர்ந்து, உணவுப் பணவீக்கமானது 2021 டிசெம்பரில் 22.1 வீதமாக இருந்த நிலையில் 2022 ஜனவரியில் 25 வீதமாக அதிகரித்துள்ளது. அதே சமயம் 2021 டிசெம்பரில் 7.5 வீதமாக இருந்த உணவு அல்லாத பணவீக்கம் 2022 ஜனவரியில் 9.2 வீதமாக அதிகரித்துள்ளது.

இதற்கமைய , உணவு வகைகளில் , அரிசி, புதிய பழங்கள், பால்மா மற்றும் பாண் ஆகியவற்றின் விலைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.


மேலும், போக்குவரத்து (பெற்றோல் , டீசல், பஸ் கட்டணம்), நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் பிற எரிபொருள் வீட்டு வாடகை, பராமரிப்பு/புனரமைப்பு ஆகியவற்றில் காணப்பட்ட விலை அதிகரிப்பால் உணவு அல்லாத பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. கல்வி (உயர் கல்வி மற்றும் தொழில் பயிற்சிக்கான பாடநெறி கட்டணம்), உணவகம் மற்றும் ஹோட்டல்கள் போன்ற உப பிரிவுகளும் இதில் அடங்கும். (அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கழிவை 120 நாட்களில் அகற்ற நடவடிக்கை

கொழும்பு, பெப். 02

கடலில் தீக்கிரையான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் கழிவுகள் மற்றும் அழிவடைந்த பகுதிகளை அகற்றும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, 120 நாட்களில் இந்தப் பணிகளை நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)



# சிலருக்கு மட்டுமே கல்வி?

■ ரம்யா குமார்

“என்னால் கவனம் செலுத்தவோ, தொடர்ச்சியாக ஒரு இடத்தில் அமர்ந்திருக்கவோ முடிவதில்லை. எனினும் எனது பெற்றோரோ ஆசிரியர்களோ இதனை ஒரு பிரச்சினையாகக் கருதவில்லை. எனது நடவடிக்கைகள் வன்முறையாக மாறும் போதே எனது பிரச்சினை இனங்காணப்பட்டது. நான் சலித்திருந்தேன். ஒன்று திரட்டப்பட்ட எனது விரக்தி உதவிக்கான ஒரு குரலாய் வெளிவந்தது.”- லக்கி, பல்கலைக்கழக மாணவன்.

லக்கி அரச பல்கலைக்கழகத்தில் கல்வி பெற்று வந்த உயர் செயல்திறனுள்ள விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவனாவான். அவன் அவமானங்களையும், உடல் ரீதியான தண்டனைகளையும், மூன்று மாத இடைநீக்கத்தையும் எதிர்கொண்டு இறுதியில் வீட்டை விட்டோடித் தடுப்புக்காவல் மையத்தில் வைக்கப்பட்டதை மீட்டிப் பார்க்கின்றான். அங்கு ஒரு வைத்தியரால் அவனது ஆற்றல் இனங்காணப்பட்டு, அவரது உதவியோடு அவனால் மீண்டும் பாடசாலை திரும்ப முடிந்தது. ” பல தடைகள் இருந்த போதும் என்னால் இம்முறையிலிருந்து தற்செயலாகவே விடுபட முடிந்ததது. எனினும் பல சிறுவர்கள் இதற்குள் சிக்கியே காணப்படுகின்றனர்.”

இலங்கையின் கல்வித் திட்டமானது விசேட தேவைகள் உள்ள மற்றும் வலது குறைந்த மாணவர்களையும் உள்ளடக்கி அவர்களை ஆதரிக்கும் என்று கூறுகின்றது. எனினும் அவ்வாறான சிறுவர்களில் மூன்றிலொரு பங்கினர் பள்ளிக்கூடம் செல்வதில்லை. அப்படியே சென்றாலும் அதில் பலருக்கு ஆதரவு தேவை என்ற விடயம் இனங்காணப்படுவதில்லை.

விசேட கல்வித் தேவைகளுடைய மகனின் தாயான தீப்தி கூறுகின்றார், ” எமது கல்வி முறையானது எல்லாச் சிறுவர்களும் ஒரேமாதிரியானோர் எனவும் அவ்வாறு ஒரு சிறுவனோ சிறுமியோ இல்லாவிடில் அவர்களில் ஏதோ ஒரு குறை இருக்கின்றது எனவும் கருதுகின்றது.” கல்வி அமைச்சானது பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரையும் இணைத்துக் கொள்ளும்படி வழிகாட்டுகின்ற போதிலும் அவ்வாறு அவர்களை இணைக்கையில், குறிப்பாகத் தாய்மார் மீது முழுப் பொறுப்பும் சுமத்தப்படுகின்றது. ”பெற்றோர் ஆசிரியர் சந்திப்புகளின் போது எனது மகன் வித்தியாசமானவன் போன்றும் எனது கடமையை நான் சரிவரச் செய்வதில்லை போன்றும் என்னை உணர வைப்பார்கள்.” ஆசிரியர்களோ நிர்வாகமோ பிள்ளைகளின் பிரச்சினைகளைச் சரியாக இனக்காணத் தவறுவதால் பள்ளிக்கூடமானது எதிர்மறையான ஒரு அனுபவத்தையே அளிக்கின்றது. ”எனது மகனை ஏனைய மாணவர்களிலிருந்து வேறுபடுத்துவதும், தண்டிப்பதும் அடிக்கடி இடம் பெறுபவை. எனினும் இவற்றால் அவனது பிரச்னைக்கான தீர்வு கிடைக்கப்போவதில்லை.”

எமது கல்வி முறையில் அவ்வளவு வெளிப்படையாகத் தென்படாத கற்றல் சவால்களையுடைய மாணவர்களை இனங்காண்பதற்கான, உதவுவதற்கான முறைகள் இல்லை. மாறாக, முறையற்ற நடத்தைக்காக இவ்வாறானோர் தண்டிக்கப்படுகின்றனர். இம்மாணவர்கள் இனங்காணப்பட்ட போதும் அவர்களை மதிப்பிடும், தொடர்கண்காணிக்கும் அமைப்புகள் காணப்படுவதில்லை. இதனால் பிரச்சினை தொடர்பாகப் போதிய விளக்கமற்ற பெற்றோர்கள் இதனைத் தனித்துக் கையாள நேரிடுகின்றது. இறுதியில் மாணவன் குறைந்த கல்விச் செயல்த்திறனையும், குறைந்த சுயமரியாதையையுமே சம்பாதிக்கின்றான்.

**மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள்**

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1996, ”எந்தவொரு வேலைவாய்ப்பு அல்லது அலுவலகத்திற்கான ஆட்சேர்ப்பு அல்லது எந்தவொரு கல்வி நிறுவனத்தில் சேர்க்கையிலும் ஊனமுற்ற எந்தவொரு நபருக்கும் அத்தகைய ஊனத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படக்கூடாது” என்று குறிப்பிடுகிறது. அதற்கேற்ப வெளிப்படையாக விசேட தேவைகளுள்ள மாணவர்கள் பாடசாலைகளின் விசேட கல்விப் பிரிவுகளில் சேர்க்கப்படுகின்றனர். விசேட தேவைகள் உள்ள மாணவர்களுக்கும் கல்வி வழங்கும் பாடசாலையொன்றின் அதிபரான ஷாந்தி, இவ்வாறான மாணவர்களை உள்ளடக்குவதன் பெயரில் அவர்களைப் பிரதான வழக்க முறைகளுக்கு ஒருங்கிணைக்கவே முயல்கிறார்கள் எனக் கருதுகின்றார். “இத்தகைய மாணவர்கள் விருத்தியடைவதற்கு ஏற்ற சூழலை வழங்குவதை விடுத்து, அவர்களுக்குச் சிறிதளவே பயனளிக்கும் பொதுவான கல்விச் சூழலுக்கேற்ப அவர்கள் வடிவமைக்கப்படுகின்றார்கள்.”

சில தனியார் பாடசாலைகளில் பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்கள் போன்ற வளங்கள் காணப்பட்டாலும் இலங்கையின் பெரும்பாலான மாணவர்களுக்கு இத்தகைய வசதிகள் கிடைப்பதில்லை. குறைந்தளவு ஆதரவு மற்றும் வளங்களோடு மத்திய மாகாணத்திலுள்ள தனது கிராமப் பள்ளிக்கூடத்தில் முன்னேற்பாடுகளின்றித் திடுதிப்பென விசேட கற்றல் பிரிவொன்று தாபிக்கப்பட்டதை நினைவுகூருகிறார் அதன் அதிபரான நயனா. நயனாவின் பாடசாலையிலுள்ள சுமார் 500 மாணவர்களில் 25 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் விசேட கற்றல் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இதில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் ஆட்டிஸம் குறைபாடு உள்ளவர்கள். அவரது ஆற்றல்கள் வேறுபட்ட போதும் அவர்கள் அனைவரும் ஒரு சிறிய வகுப்பறையையும் ஒரே ஒரு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியரையும் கொண்டு இயங்குகின்றனர். கிராமப் பாடசாலைகளில் இவ்வாறான ஆசிரியர்களுக்கான பணிநிலைகள் பெரும்பாலும் வெறுமையாகவே உள்ளன. இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர், குறிப்பாகத் தாய்மார்கள், அவர்களின் கல்வியின் பொருட்டு பாடசாலைகளில் அவர்களோடு நிற்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

நயனாவின் பாடசாலை உள்ள வலயத்தில் உள்ள மூன்று விசேட கற்பித்தல் நிலயங்களும் வளங்களுக்கான பாரிய தட்டுப்பாட்டுடன் இருப்பதோடு, மாணவர்களைச் சுதந்திரமாக இயங்க ஊக்குவிக்க முடியாத நாள் பராமரிப்பு மையங்களாக விளங்குகின்றன. அரிதான சந்தர்ப்பங்களில் உயர் கல்விச் செயற்றிறனுடைய மாணவர்களையன்றி மற்றையோரை ‘ஒருங்கிணைப்பது’ இயலாத விடயம் என ஷாந்தி (அதிபர்) கருதுகின்றார். “பல விசேட கல்விப் பிரிவுகள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களைக் கொண்டிருப்பதில்லை. இதில் அனுபவம் குறைந்த பொதுக் கல்வி ஆசிரியர்கள் தமது வகுப்பறைகளுக்கு மேலதிகமாக இவ்வாறான மாணவர்களையும் தனித்துக் கையாள வேண்டி யுள்ளது.” இங்கு பெரியதோர் காரணியாகவிருப்பது விசேட கல்வித் திட்டங்களில் வலுவான பாடநெறிகள் இல்லாமையாகும். அதாவது பார்வை மற்றும் கேட்டல் குறைபாடுகள் மற்றும் நரம்பு விருத்தி தொடர்பான பிரச்சினைகளுடைய பிள்ளைகளைக் கற்பிக்கப் போதியளவு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களின் மையாகும்.

இந்த வகையில் உடல் ரீதியான குறைபாடுள்ள மாணவர்களின் நிலை ஒப்பீட்டளவில் நல்லது எனக் கூறலாம். கடுமையான உடலியல் குறைபாடுள்ள ஹிரான் என்கிற பல்கலைக்கழக மாணவன் அவனது ஆரம்பப் பள்ளிக்கூட நாட்களில் அவனது தாயார் அவனுடன் பாடசாலை நேரம் முழுவதும் நின்றதை நினைவுகூருகிறான். அவனால் தானாகப் பிரவேசிக்க முடியாத இடங்களுக்கு அவனை அழைத்துச் செல்ல அவனது நண்பர்களும் ஆசிரியர்களும் பெரிதும் உதவியிருந்தனர். எனினும் சரிவுப்பாதைகளோ, மின் தூக்கிகளோ, மாற்றுத்திறனாளிகளுக்கான மலசலகூடங்களோ இல்லாத காரணத்தால் அவனால் சுதந்திரமாக இயங்க முடியவில்லை. பல்கலைக்கழகங்களிலும் இதே குறைபாடுகள் தொடர்வதால் இவ்வாறான மாணவர்களுக்குச் சுதந்திரமாகக் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தை எமது கல்வி முறை வழங்கத் தவறிவிட்டது என்றே கூற வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர நிர்ணயக் குழுக்கள் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான கொள்கைகளைக் கல்வி நிலையங்கள் விருத்தி செய்ய வேண்டும் எனக் கூறுகின்றன. எனினும் அதற்கான மனித மற்றும் ஏனைய வளங்களை அவர்கள் தருவதில்லை.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1996 இன் படி ”ஊனமுற்ற எந்தவொரு நபரும் அவ்வூனத்தின் அடிப்படையில் பொதுமக்களின் வேறு எந்த உறுப்பினரும் அணுகக்கூடிய அல்லது பயன்படுத்தும் உரிமையுடைய எந்தவொரு கட்டிடத்தையோ இடத்தையோ, கட்டணம் செலுத்தியோ இன்றியோ அணுக அல்லது பயன்படுத்த எந்தவொரு பொறுப்பு, கட்டுப்பாடு அல்லது நிபந்தனைக்கும் உட்பட்டவராக இருக்கக்கூடாது.” 2006 இன் மாற்றுத்திறனாளிகள் (அணுகல்) விதிமுறைகள் சட்டம், கட்டிடங்களை மாற்றுத்திறனாளிகள் அணுக மற்றும் பயன்படுத்துவதற்கான தரநிலைகளை வகுத்திருந்து. அதன்படி இலங்கையின் சகல கட்டடங்களும் இத் தரநிலைகளை மூன்று ஆண்டுகளில், அதாவது 2009 ஆம் ஆண்டின் போது கொண்டிருக்க வேண்டும். இச் சட்டம் முன்வைக்கப்பட்டுப் பன்னிரண்டு வருடங்களுக்கு மேல் கடந்த போதும் இன்றும் பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் மாற்றுத்திறனாளிகளால் பயன்படுத்தக் கூடிய தன்மை பெரிதுமின்றியே காணப்படுகின்றன. அதிக செலவு, நேர விரயம், உடனடித் தீர்வுகள் கிடைக்கப்பெறாமையால் இதற்கெதிராக வழக்குத் தொடுப்பவர்களும் அற்பசொற்பம்.

இலவசக் கல்வியானது சமத்துவமான சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டது. 1943இன் கன்னங்கர அறிக்கையின் படி, ”திறன்களும் ஆற்றல்களும் எந்தவொரு சமூக வகுப்புக்கோ குழுக்கோ வரையறுக்கப்படாததோடு, சம கல்விச் சந்தர்ப்பங்களின் மூலம் எந்தவொரு சமூக அமைப்பும் அவற்றின் வெளிப்பாட்டை ஊக்குவிக்க வேண்டும்.” ஆகவே மாற்றுத்திறனாளிகளையும், விசேட கல்வித் தேவையுள்ளவர்களையும் உள்ளடக்கி, அனைவருக்குமான இலவசக் கல்வியைப் பேண கல்வி அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- இங்கு புனைப்பெயர்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.
- எழுத்தாளர் யாழ் பல்கலைக்கழகத்தின் சமூக மற்றும் குடும்ப மருத்துவத் துறையைச் சார்ந்தவர்
- மொழிபெயர்ப்பு: கோபிகா சிவகுமார்

# நியோகோவ் வைரஸ் அடுத்த அச்சுறுத்தலா?

■ கு.கணேசன்

கொரோனா மூன்றாம் அலையின் வீரியம் குறைந்துவருவதால், பொது முடக்கம் உள்ளிட்ட பலதரப்பட்ட கட்டுப்பாட்டு நெறிமுறைகளில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டு, இயல்பு வாழ்க்கை திரும்பிவரும் நிலையில், புதிய கொரோனா வைரஸ் 'நியோகோவ்' மனிதர்களுக்குப் பரவ வாய்ப்புள்ளது என்று சீன அறிவியலர்கள் விடுத்துள்ள எச்சரிக்கை இணையவழியில் பரவி, அனைவரையும் அச்சமூட்டுகிறது.

கடந்த 2019இன் இறுதியில் சீனாவின் வூஹான் நகரில் கொரோனா வைரஸின் முதல் அலை பரவுவது கண்டறியப்பட்டது. அங்கிருந்து அது உலகம் முழுவதும் பரவியிருக்கிறது. இடைப்பட்ட காலத்தில் கொரோனா வைரஸில் ஏற்பட்ட மரபணுப் பிறழ்வுகள் காரணமாக, டெல்டா, டெல்டா பிளஸ் எனப் புதிய வேற்றுருவங்கள் உருவாகி, இரண்டாம் அலையைத் தோற்றுவித்தன. இவற்றின் தாக்குதல் வேகம் அதிகமாக இருந்ததால் உயிர்ச் சேதமும் பல மடங்கு அதிகரித்தது. கடந்த சில மாதங்களாக இலங்கை, இந்தியா உட்பட உலகம் முழுவதிலும் ஒமைக்ரோன் எனும் புதிய கொரோனா வேற்றுருவம் அதிவேகமாகப் பரவியது. இந்த மூன்றாம் அலை விரைவிலேயே உச்சம் தொட்டு, இப்போது தணிந்துவருகிறது.

இதில் உயிர்ப் பலிகள் அவ்வளவாக இல்லை என்பது ஆறுதல். இந்தச் சூழலில் சீனாவின் நச்சுயிரி ஆய்வகமும் சீன அறிவியல் அகாடமி ஆய்வாளர்களும் கொரோனா குடும்பத்தைச் சேர்ந்த 'நியோகோவ்' எனும் வைரஸ் குறித்து ஆய்வுசெய்து, விரிவான அறிக்கையை வெளியிட்டுள்ளனர். அதில், " 'வெஸ்பர்' எனும் ஒரு வகைத் தென்னாப் பிரிக்க வெளவால்களிடம் (Vesper bats) 'நியோகோவ்' வைரஸ் காணப்படுகிறது. அந்த வைரஸில் ஒரு மரபணு மாற்றம் ஏற்பட்டால்கூட மனிதர்களுக்கு இந்த வைரஸ் தொற்றிக் கொள்ளும் ஆபத்து உள்ளது. இது அதிக உயிரிழப்பை ஏற்படுத்தும் வைரஸாகும். அதாவது, இவ்வகை வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுபவர்களில் 3 பேரில் ஒருவர் உயிரிழக்க நேரிடும்" என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதுதான் இப்போது உலகளாவிய அச்சத்துக்குக் காரணமாகிறது. அந்த அறிக்கையை முழுவதுமாகப் படித்தால், இந்த அச்சம் தேவையில்லை என்பது புரியும் என்பதே அநேக வைரஸ் வல்லுநர்களின் கணிப்பாக உள்ளது. எப்படி?

**'நியோகோவ்' என்பது என்ன?**

'நியோகோவ்' என்பது புதிய கொரோனா வைரஸ் (நேற உழசழயெஎசைரள) எனும் பொருளில் பெயர் சூட்டப்பட்ட வைரஸ். முதலில், இந்தப் பெயரே பொருத்தமில்லை என்கின்றனர் வல்லுநர்கள். காரணம், 'நியோகோவ்' புதிய வைரஸ் அல்ல. இது ஏற்கெனவே 2012-ல் மத்தியக் கிழக்கு நாடுகளைக் குறிவைத்துத் தாக்கிய 'மெர்ஸ்' வைரஸோடு நெருங்கிய தொடர்புடைய வைரஸ். இந்த வைரஸால் அப்போது 27 நாடுகளில் 'மெர்ஸ்' (ஆனைனடந நுயளவ சுநளிசையவழசல ளுலனெசழஅந) நோய் பரவியது. ஆனால், அது உலகளாவிய பெருந்தொற்றாகப் பரவவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும்.

அடுத்து, 'நியோகோவ்' வைரஸ் வெளவால்களிடம் பரவுவதற்கு வெளவால்கள் உடலில் உள்ள 'ஏசிஈ2' (ACE2 receptors) எனும் ஏற்பிட செல் வாசல்களைப் பயன்படுத்துகின்றன. இதே வகை 'ஏசிஈ2' ஏற்பிட செல் வாசல்கள், மனிதர்களுக்கும் இருக்கின்றன என்பதால், மனிதர்களுக்கு இந்த வைரஸ் தொற்றிக்கொள்ளும் ஆபத்து உள்ளது என்கின்றனர். ஆனால், இதுவரை இந்த வைரஸ் மனிதர்களுக்குப் பரவியதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

ஆகவேதான், உலக சுகாதார நிறுவனம் உட்பட பல ஆய்வாளர்களும் 'நியோகோவ்' குறித்த சீனாவின் ஆய்வறிக்கை அவசர அவசரமாக வெளியிடப்பட்டுள்ளது. அது இன்னமும் சக ஆய்வாளர்களால் மறுமதிப்பீடு (Peer-review) செய்யப்படவில்லை. பொதுவாக, மறுமதிப்பீடு செய்யப்படாத ஆய்வறிக்கைகளை சமூக வலைதளங்களில் வெளியிடுவதும், அவற்றின் முடிவுகளை வைத்து பொதுச் சமூகத்தை அச்சப்படுத்துவதும், வழிகாட்டுவதும் மருத்துவ நெறிமுறைகளை மீறுவது. இந்தப் புதிய வைரஸ் மனிதர்களுக்கு அச்சுறுத்தல் தருமா என்பது குறித்துப் பேச இன்னும் விரிவான ஆராய்ச்சிகள் தேவை' என்று தெரிவித்துள்ளனர்.



**மரபணு மாற்றம் ஏற்படுவது எப்படி?**

'நியோகோவ்' வைரஸ் குறித்த சீனாவின் ஆய்வறிக்கையில், இப்போதைக்கு மனித செல்களுக்குள் தொற்ற இந்த வைரஸூக்கு ஆற்றல் இல்லை என்பதையும், அந்த வைரஸில் மரபணு மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே, மனிதர்களுக்கு இந்த வைரஸ் தொற்றிக்கொள்ளும் ஆபத்து உள்ளது என்பதையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த இடத்தில், வெளவால்களிடம் வைரஸ் குறித்து ஆராய்ந்துவரும் கனடாவின் மேக்மாஸ்டர் பல்கலைக்கழக ஆய்வாளரான அரிஞ்ஜெய் பானர்ஜி கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். 'நிலையான இயற்கைச் சூழல் உள்ள இடங்களில், இயல்பாக வாழ்ந்துகொண்டிருக்கும் வெளவால்களிடம் காலங்காலமாக வைரஸ் வகைகள் பல்லாயிரக்கணக்கில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. இந்த வைரஸ் வகைகளால் நமக்கு எந்த ஆபத்தும் ஏற்படுவதில்லை… அவற்றையோ, அவற்றின் வாழிடத்தையோ நாம் தொந்தரவு செய்யாதவரை. காடழிப்பு மற்றும் காட்டுயிர் விற்பனை மூலம் அவற்றை நாம் நெருங்கும்போது மட்டுமே அவை நம்மைத் தொற்றுகின்றன. காடழிப்பு காரணமாக வெளவால்கள் பறக்கும் வழித்தடம் மாறும்போது, அந்தந்தப் பகுதிகளில் புதிதாக உருவாக்கப்பட்ட வயல்களுக்கும் நகர்ப் பகுதிகளுக்கும் அவை வருகின்றன.

அப்படி வரும்போது, அவற்றின் எச்சம், எச்சில் போன்றவற்றுடன் நாம் தொடர்புகொள்வது மட்டுமில்லாமல், நம்மைச் சார்ந்த வளர்ப்பு உயிரினங்களும் தொடர்புகொள்கின்றன. வழி மாறிய வெளவால்களுக்கு ஏற்படும் சூழல் அழுத்தம் காரணமாக, தம்மிடமுள்ள வைரஸ்களை அளவுக்கு அதிகமாக வெளிவிடுகின்றன. அந்த வைரஸ்கள் புதிய சூழலுக்கு ஏற்பத் தம்மைத் தகவமைத்துக்கொள்ளும்போது, வேறொரு உயிரினத்துக்குத் தாவுகின்றன. அப்போது, அந்த உயிரினத்துக்கோ, அந்த உயிரினம் வழியாக நமக்கோ அவை தொற்றுகின்றன் நோய்களையும் ஏற்படுத்துகின்றன. அப்படிப் பரவிய வைரஸ்களின் மரபணுக்கள் திடீர் பிறழ்வுக்கும் (ஆரவயவஅழைஉ) உட்படுகின்றன' என்கிறார் அவர்.

சீனாவின் வூஹானில் காட்டுயிர் அங்காடிகளில் விற்கப்பட்ட வெளவால்களிடம் இருந்து சார்ஸ் கரோனா வைரஸ்-2 மனிதர்களுக்குத் தொற்றியதாக சீன அரசு அளித்த விளக்கம் பானர்ஜியின் கருத்துக்கு வலுசேர்ப்பதை நாம் உணரலாம். இன்னொரு எடுத்துக்காட்டு, நிபா வைரஸ் தொற்று. இது 1998இல் மலேசியாவின் அழிக்கப்பட்ட ஒரு காட்டுப் பகுதியில் அமைக்கப்பட்ட தானியக் களஞ்சியம் ஒன்றில், 'கலோங் வெளவால்கள்' ஓய்வெடுக்கத் தொடங்கின. அவற்றின் எச்சம் வழியாகப் பன்றிகளுக்கு நோய் தொற்றியது. தொடர்ச்சியாக அந்தப் பன்றிகளைப் பராமரித்த உழவரும் பாதிக்கப்பட்டார். ஆகவே, ஒரு புதிய வைரஸ் நம்மைத் தொற்றுவதும் தொற்றாததும் நாம் நடந்துகொள்ளும் முறையில்தான் உள்ளது.

மேலும், இந்தியாவில் தேசிய நோய்ப் பரவல் மற்றும் தடுப்பியல் துறை ஏற்படுத்தியுள்ள அறிவியல் ஆலோசகர் குழுவின் தலைவர் டாக்டர் ஜெயப் பிரகாஷ் முளியில் சொல்வதும் நம் கவனத்தைப் பெறுகிறது. 'வெளவால்களிடம் வாழும் எல்லா வைரஸ்களும் மனிதர்களுக்குத் தொற்றிவிடும் என்று சொல்வதற்கு இல்லை. 'நியோகோவ்' வைரஸ் மனிதர்களுக்குப் பரவும் வாய்ப்பு மிக மிகக் குறைவு. நம்மைச் சுற்றி இருக்கும் மாசடைந்த சூழலில் ஏற்கெனவே லட்சக்கணக்கான வைரஸ்கள் உள்ளன. அவற்றுடன் வாழ நாம் பழகியிருக்கிறோம்.

'நியோகோவ்' வைரஸ் கொரோனா குடும்பத்தில் 'மெர்பிகோ வைரஸ்' (Merbecovirus) எனும் துணை இனத்தைச் சார்ந்தது. அந்தக் குடும்பத்தில் இதே இனத்தைச் சேர்ந்த 'ஹெச்கேயு1' (HKU1) மற்றும் 'ஓசி43' (OC43) வைரஸ் வகைகள் நம்மை அவ்வளவாகத் தொந்தரவு செய்யாதவை. அதிகபட்சம் ஜலதோஷத்தை மட்டுமே உண்டாக்கக்கூடியவை. இதுவரை மரபணு மாற்றத்துக்கு உள்ளாகாதவை. அந்த வகையைப் போலத்தான் 'நியோகோவ்' வைரஸூம். இந்த வைரஸ் குறித்து பீதியும் பதற்றமும் தேவையில்லை' என்கிறார் முளியில்.


எனவே, உலக சுகாதார நிறுவனம் உறுதிப்படுத்தாத மருத்துவச் செய்திகளைக் கொண்டும், ஆதாரமில்லாத அல்லது தீர்மானமான முடிவுக்கு வராத ஆய்வு முடிவுகளைக் கொண்டும் சமூக ஊடகங்கள் பொதுச் சமூகத்தை அச்சப்பட வைப்பதை இனி மேலாவது நிறுத்த வேண்டும் என்பதே நம் அனைவரின் எதிர்பார்ப்பு. ■

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

36. எழுத்து, சொல், வாக்கியம், பந்தி என்பதனைக் காட்டும் சரியான படம்

1) 2) 3)




37. 
```
   P
   P
+  Q
  QP
```
இங்கு P, Q ஆகியன 10 இனை விடக் குறைந்த எண்களாகும் எனின் Q இன் பெறுமானம் யாது?


1) 6 2) 8 3) 1

38. க்கு எனின் க்கு ..................

1) 2) 3)



39. சிறிய சம அளவான சதுரமுகிக் குற்றிகளால் இவ்வுரு ஆக்கப்பட்டுள்ளது. உருவில் உள்ள சிறிய சதுரமுகிக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?



1) 24 2) 48 3) 64

40. ஆசிரியர் வகுப்பில் உள்ள மாணவர் ஐவருக்கு 1 தொடக்கம் 5 வரையான இலக்கங்களை வழங்கினார். இவர்களை அடுத்தடுத்து மூன்று இலக்கங்கள் அமையுமாறு குழுவாக மாறும்படி கூறினார். இவ்வாறு குழுக்களாகும் போது அக்குழுவில் நிச்சயமாக இடம்பெறக்கூடிய இலக்கம்.

1) 2 2) 3 3) 5

**01) பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்கவும்**

எமது பேருந்து சற்று நேரத்தில் பேராதனையைக் கடந்து கொழும்பு வீதியை வந்தடைந்தது. வீதியின் இரு மருங்கிலிருந்தும் பாதசாரிகள் கையசைத்து எமக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். சிறிது தூரம் சென்றதும் கடுகண்ணாவ மலைத் தொடர் தென்படத் தொடங்கியது. கிழக்கு வானில் சூரியன் தகதகவென மின்னியபடி அம் மலைத் தொடர்களுக்கிடையே எட்டிப் பார்த்தான். தூரத்தே தெரியும் வீதிகள் பாம்புகள் வைளந்து செல்வது போலக் காட்சியளித்தன. இவ்வாறாக, நாம் இயற்கையின் விந்தைகளையும் அழகையும் இரசித்தபடி கொழும்பு நகரை வந்தடைந்தோம்.

**கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை பந்தியில் இருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

i) பேருந்தில் சென்ற போது தென்பட்ட மலைத் தொடர் எது?

..............................................................................................

ii) தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக.

..............................................................................................

iii) பந்தியில் வரும் இரட்டைக் கிளவிச் சொல் ஒன்று எழுதுக.

..............................................................................................

iv) உவமைத் தொடரினை எழுதுக.

..............................................................................................

v) சினைப் பெயர் ஒன்று எழுதுக.

..............................................................................................

vi) சர்ப்பங்கள் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

..............................................................................................

**02) பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

i) போக்குவரத்துப் பொலிசார் ........................... (வலப்பக்கமாகச் / வளப்பக்கமாகச்) செல்லுமாறு கூறினார்.

ii) விவசாயிகள் மண்ணை ......................... (வழமாக்கினர் / வளமாக்கினர்)

**03) தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமொன்று எழுதுக.**

i) கற்றுக் / கோபத்தைக் / வாழலாம் / கொண்டால் / கட்டுப்படுத்தக் / சிறப்பாக

## விடைகள்

36) 3
37) 3
38) 3
39) 2
40) 2

**வினாத்தாள் – II**

01) i) கடுகண்ணாவ மலைத் தொடர்
ii) நாம் / எமக்கு
iii) தகதக
iv) பாம்புகள் வளைந்து செல்வது போல
v) கை
vi) பாம்புகள்

02) i) வலப்பக்கமாக
ii) வளமாக்கினர்

03) கோபத்தைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொண்டால் சிறப்பாக வாழலாம்

## கல்வி tv CHANNEL-1

**02.02.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**02.02.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கோவிட் தடுப்பூசி பெறுவதில் மக்களுக்கு ஆர்வம் இல்லை!

## மட்டக்களப்பு அரச அதிபர்

மட்டக்களப்பு, பெப். 02

**மட்டக்களப்பு மாவட்டத்தில் தடுப்பூசி பெறுவதில் மக்களுக்கு ஆரம்பத்தில் இருந்த ஆர்வம் தற்போது இல்லை என்று அரசாங்க அதிபர் க. கருணாகரன் தெரிவித்துள்ளார்.**

தடுப்பூசியை பெறுவதன் முக்கியத்துவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதில் பொலிஸாரும் முப்படையினரும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு மிகுந்த ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். இனிவரும் காலங்களில் நாம் பாதுகாப்புடன் இருக்க வேண்டும். நாம் தற்பாதுகாப்பாக இருக்க வேண்டிய அவசியத்தை நாம் சமூகத்திற்கு சொல்லவேண்டும்.

தடுப்பூசியை ஆரம்பத்திலே போடுவதில் மக்களுக்கு இருந்த ஆர்வம் தற்போது இல்லை. இது தொடர்பில் பிரதேச செயலாளர்களுக்கு தடுப்பூசியின் முக்கியத்துவத்தை அறிவித்து இதனை அவர்களின் வலையமைப்பு மூலமாக செயல்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

சமூகத்தை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதை நாம் கொரோனா வைரஸ் மூலமாக நாம் அறிந்துகொண்டோம். சுகாதார ஊழியர்களின் தைரியமும் அர்ப்பணிப்பும் எப்போதும் இருக்கவேண்டும். அவர்களுக்காக நாம் எப்போதும் பக்கபலமாக இருப்போம் - என்றார். (ஐ)



# பாடசாலையின் அதிபரை மாற்றுமாறு ஆர்ப்பாட்டம்!

திருகோணமலை, பெப். 02

மூதூர் வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட ஆலிம் சேனை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் அதிபரை இடமாற்றம் செய்யுமாறு வலியுறுத்தி, பாடசாலை முன்பாக நேற்று முன்தினம் காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணி வரை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தை பெற்றோர்கள், பழைய மாணவர்கள், சங்கங்களின் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் நடத்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர், "16 வருடங்கள் தாண்டியும் அதிபர் பதவி வகிக்க இது மன்னராட்சியா?", "16 வருடங்கள் அதிபராக இருந்து இவர் சாசித்தவை என்ன?" மற்றும் "கல்வி அதிகாரிகளே அதிபரிடம் இருந்து எமது பாடசாலையை மீட்டுத் தாருங்கள்" உள்ளிட்ட வாசகங்களை ஏந்தியவாறு இதன் போது கோஷமிட்டனர்.

இதனையடுத்து, ஆர்ப்பாட்ட இடத்துக்கு வருகை தந்த மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் முனவ்வரா நளீம், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் அதிபரை மாற்றுவதாக வாக்குறுதி வழங்கியதையடுத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து சென்றனர். (ஐ)

# அதிபரின் இடமாற்றத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

சம்மாந்துறை, பெப். 02

தங்கள் பாடசாலை அதிபரின் இடமாற்றத்தை இரத்துச் செய்ய கோரி சம்மாந்துறை கல்விக்கோட்டத்தின் கீழுள்ள கமு ஃ சது ஃ ஜமாலியா வித்தியாலயத்தின் மாணவர்களும் பெற்றோரும் நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பெற்றோர், அன்றாடம் கூலித்தொழில் செய்தே எங்கள் சீவனோபாயத்தை நடத்துகிறோம். எங்கள் போன்றவ பெற்றோர்களின் பிள்ளைகளை இந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். சுமார் 40 வருட வரலாற்றைக்கொண்ட இப் பாடசாலைக்கு அவ்வப்போது பல அதிபர்கள் நியமனம் பெற்று வந்த போதிலும், கல்வியிலோ அல்லது பௌதிக அபிவிருத்தியிலோ பாடசாலை முன்னேற்றம் காணவில்லை.

இந்நிலையில் சுமார் இரண்டரை வருடத்திற்கு முன்னர்



இப்பாடசாலைக்கு புதிதாக நியமனம் பெற்று வந்த பெண் அதிபரான எம். எம் . மஹிஸா பானு பெற்றோருக்கும் பாடசாலைக்குமான தொடர்பை ஏற்படுத்தி கல்வி மற்றும் பௌதிக அபிவிருத்தியில் பெரும் வளர்ச்சியை ஏற்படுத்தியிருந்தார்.

தரம் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் 2020 ஆண்டு 3 மாணவர்களை சித்தி பெற வைத்து வரலாற்று சாதனை படைத்தார். இந்த வளர்ச்சியை சகித்துக்கொள்ள முடியாத சில தீயசக்திகளின் செயல்பாட்டால் , எங்களுடைய அதிபரை தற்காலிக இடமாற்றம் செய்ய கல்வி அதிகாரிகள் எடுத்த தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்து , இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்து மீண்டும் எங்கள் அதிபரை இந்தப் பாடசாலைக்கு நியமிக்குமாறு கேட்டு கொள்கிறோம் - என்றனர்.

போராட்டத்தின் முடிவில் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு மகஜரையும் கையளித்தனர். (ஐ)

# கணவனின் கத்திக் குத்துக்கு இலக்கான மனைவி படுகாயம்!

அப்புத்தளை, பெப். 02

கணவனின் கத்திக்குத்துக்கு இலக்கான மனைவி ஆபத்தான நிலையில், தியத்தலாவை அரசினர் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அப்புத்தளை நகர உணவகத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண் கடந்த 5 மாதங்களாக சம்பவம் இடம் பெற்ற உணவகத்தில் பணியாற்றி வந்துள்ளார். இந்நிலையில், குறித்த பெண் தொழில் செய்யும் உணவகத்திற்கு கத்தியுடன் வந்த அந்தப் பெண்ணின் கணவன் , தனது மனைவியை சரமாரியாக குத்தியுள்ளார்.

படுகாயங்களுக்கு உள்ளானவரை அங்கிருந்தவர்கள் மீட்டு தியத்தலாவை அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அவர் அங்கு தீவிர சிகிச்சைக்குட்பட்ட போதிலும் அவரின் நிலை கவலைக்கிடமாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அப்புத்தளை பொலிஸார் பெண்ணின் கணவரை கைது செய்துள்ளனர். அத்துடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# விபத்தில் இருவர் படுகாயம்!

கல்முனை, பெப். 02

மட்டக்களப்பு கல்முனை - ஆரையம்பதி பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு நோக்கி இருவர் பயணித்த மோட்டார் சைக்கிளும், லொறி ஒன்றும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். காயமடைந்த இருவரும் புதுக்குடியிருப்பை சேர்ந்தவர்களாவர்.

காத்தான்குடி பொலிஸார் விபத்துக் குறித்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# நிந்தவூரில் சூடு; ஒருவர் காயம்

அம்பாறை, பெப். 02

நிந்தவூர் - அட்டைப்பள்ளம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் சந்தேகநபர் ஒருவர் பயணித்த காரை பொலிஸார் பின்தொடர்ந்த சந்தர்ப்பத்தில், காரைதீவுப் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

எனினும், காரின் சாரதியே இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்துள்ளதாகவும் ஏனையோர் தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# எக்ஸ்பிரஸ் கப்பலின் கழிவுகளை 120 நாட்களில் அகற்றுவதற்கு முடிவு

கொழும்பு, பெப். 02

எம். வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் கழிவுகள் மற்றும் அழிவடைந்த பகுதிகளை அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 120 நாட்களில் குறித்த பணிகளை நிறைவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நீதி அமைச்சர் சமர்ப்பித்த கீழ்வரும் மேலதிக விடயங்கள் அமைச்சரவையால் கருத்தில் எடுக்கப்பட்டது.

கழிவுகளை அகற்றும் செயன்முறையால் தொடர்ந்தும் சமுத்திரம் மாசடையாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக குறித்த செயன்முறையை கண்காணிப்பதற்காக வர்த்தகக் கப்பல்கள் செயலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் ஏற்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய கண்காணிப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதுவரை பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களுக்கும் முதல்கட்ட இழப்பீட்டுத் தவணைக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்திற்கான மீன்பிடித் தடையை முற்றாக நீக்குதல், கழிவுகளை அகற்றும் செயன்முறை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்கள் இரண்டிலும் குறித்த தடை நீக்கப்படும், மீன்பிடி மற்றும் கடல்சார் சூழல் கண்காணிப்பு அதிகார சபையின் உரித்தின் ஒருபகுதியான 3.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கை அரசாங்கத்திற்கு வைப்பிலிடப்பட்டுள்ளது. அத்துடன், எஞ்சிய உரித்தின் பங்கைப் பெற்றுக் கொள்வதற்காக பி அன்ட் ஐ கம்பனியுடன் கலந்துரையாடுதல்.

கடல்வாழ் உயிரினங்களின் உடற்கூற்று மாதிரிகள் மற்றும் ஏனைய மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக வெளிநாட்டு ஆய்வு கூடங்களுக்கு அனுப்புதல்.

அவுஸ்திரேலியாவின் ஹெலமோர் கம்பனியால் சுற்றாடல் பாதிப்பு தொடர்பாக சட்ட ஆலோசனை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# போர்ப் பதற்றத்தை தணிக்குமாறு அமெரிக்கா விடுத்த கோரிக்கைக்கு பதில் அளித்தது ரஷ்யா

மொஸ்கோ, பெப். 02

போர் பதற்றத்தை தணிக்குமாறு அமெரிக்கா விடுத்த கோரிக் கைக்கு ரஷ்யா எழுத்து பூர்வ பதில் அனுப்பியுள்ளது.

ரஷ்யா நேற்று முன் தினம் அனுப்பிவைத்த எழுத்துப்பூர்வ பதிலில் என்ன உள்ளது? என்பது குறித்த தகவலை அமெரிக்க அதிகாரிகள் வெளியிடவில்லை.

பேச்சுவார்த்தை நிகழ்வுகளை பொதுவெளியில் சொல்வது உகந்ததல்ல என அமெரிக்க உயர்மட்ட இராஜதந்திரி ஒருவர் சர்வதேச ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

1991ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் பிளவுபட்டபோது அதிலிருந்து பிரிந்து உக்ரைன் தனி நாடானது. எனினும் உக்ரைனை தனது நாட்டுடன் இணைக்க ரஷ்யா முயன்று வருவதாக குற்றச்சாட்டுகள் உள்ளன.

இதனால், இரு நாடுகளுக்கு இடையே பிரச்னை நிலவி வருகிறது. உக்ரைனின் கிரிமியா தீபகற்பத்தை 2014 ஆம் ஆண்டு ரஷ்யா கைப்பற்றி தன்னோடு இணைத்துக்கொண்டது. இதனை தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையான மோதல் அதிகரித்து வருகிறது. உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. மேலும், உக்ரைனை நேட்டோ அமைப்பில் உறுப்பினராக சேர்க்கவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் முயற்சித்து வருகின்றன.

ஆனால் உக்ரைன் நேட்டோவில் இணைந்தால் அது தனது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என ரஷ்யா கருதுகிறது.

இந்நிலையில் உக்ரைனை அச்சுறுத்தும் வகையில் கடந்த ஆண்டு நவம்பர் முதல் உக்ரைன் எல்லையில் ரஷ்யா தனது படைகளை குவித்துள்ளது.

அதிநவீன ஆயுதங்கள், போர் தளபாடங்களுடன் 1 இலட்சத்துக்கு மேற்பட்ட ரஷ்யப் படைகள் உக்ரைன் எல்லையில் குவிக்கப்பட்டுள்ளன. இதனால் உக்ரைன் மீது ரஷ்யா எந்நேரமும் படையெடுக்கலாம் என்ற அச்சம் நிலவி வருகிறது.

இதனிடையே, ரஷ்யா படையெடுக்கும் பட்சத்தில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இதனை வெளிப்படையாக தெரிவித்துள்ளார். அத்துடன், உக்ரைனுக்கு தேவையான இராணுவ உதவிகளையும் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் அளித்து வருகின்றன.

இவ்வாறான நிலையில் போர் பதற்றத்தை தணிக்கும் வகையில் அமெரிக்கா - ரஷ்யா இடையே பல கட்ட உயர் மட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. ஐ.நா. சபையிலும் இது தொடர்பாக விவாதம் நடைபெற்றது.

பேச்சுவார்த்தையின்போது போர் பதற்றத்தை தணிக்க முன்வருமாறு ரஷ்யாவுக்கு அமெரிக்கா வேண்டுகோள் விடுத்தது. அமெரிக்கா விடுத்த கோரிக்கைக்கு ரஷ்யா எழுத்து பூர்வ பதில் அனுப்பியுள்ளது.

இதேவேளை, உக்ரைன் நேட்டோ படையில் இணையாது மற்றும் உக்ரைனில் வெளிநாடுகளின் இராணுவ தளங்கள் நிறுவப்படாது என்ற தனது கோரிக்கைகள் குறித்து அமெரிக்காவின் எழுத்துபூர்வ உத்தரவாதத்தை ரஷ்யா எதிர்பார்த்துள்ளதாகவும் தெரியவருகிறது. (அ)

# கனடா பிரதமருக்கு கொரோனா தொற்று!



ஒட்டாவா, பெப். 02

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள தாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக் கையில், 'தற்போது பெரிய அளவில் பாதிப்பு இல்லை, நலமாக உள்ளேன். வீட்டில் இருந்தே ஒன்லைன் மூலமாக தனது பணிகளை கவனித்துக் கொள்கின்றேன். மக்கள் அனை வரும் தவறாமல் தடுப்பூசி மற்றும் பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும்' என கூறியுள்ளார்.

ஏற்கனவே தனது குழந்தைகளில் ஒருவர் கோவிட்-19 தொற்றுக்கு நேர்மறை சோதனை செய்ததை அடுத்து, அவர் தொலைதூரத்தில் இருந்து தனது பணியை முன்னெடுத்து வந்தார். 5 நாட்கள் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டிருப்பதாக கடந்த வியாழன் ஜஸ்டின் கூறியிருந்தார். பின்னர் அவருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டதில், வைரஸ் தொற்று இருப்பது தெரியவந்துள்ளது.

இதற்கு முன்பு, ட்ரூடோவின் மனைவிக்கு கொரோனா தொற்று ஏற்பட்டபோதும், வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டார்.

இதனிடையே கனடாவில் கட்டாய தடுப்பூசிக்கு எதிராக தலைநகர் ஒட்டாவாவில் ஆயிரக்கணக்கானோர் திரண்டதையடுத்து, பிரதமர் ஜஸ்டீன் ட்ரூடோ பாதுகாப்பான இடத்துக்கு வெளியேறியிருந்தார். இந்த நிலையிலேயே அவருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.(அ)

# ரஷ்ய படையெடுப்பு அச்சத்துக்கு மத்தியில் உக்ரைன் விரைகின்றார் பிரிட்டன் பிரதமர்!



லண்டன், பெப். 02

ரஷ்ய படையெடுப்பு குறித்த கவலைகள் அதிகரித்து வரும் நிலையில், பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன், உக்ரைனுக்குச் சென்று அந்த நாட்டின் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

மொஸ்கோவுடனான வாதங்களுக்கு இராஜதந்திர தீர்வைக் கண்டறியவும் போரை தவிர்க்கவும் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் இணைந்து பணியாற்றுவதாக பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன் உறுதியளித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை பிரதமர் பொரிஸின், உக்ரைனின் தலைநகரான கியிவ் விஜயத்துக்கு முன்னதாக ரஷ்யாவிடம் இருந்து நிலையான ஆட்சி மற்றும் ஆற்றல் சுதந்திரத்தை மேம்படுத்த 88 மில்லியன் பவுண்ஸ்கள் வழங்குவதாக பிரிட்டன் அரசாங்கம் அறிவித்தது.

இது குறித்து பிரதமர் கூறுகையில்-

ஒவ்வொரு உக்ரேனியரும் தாங்கள் எவ்வாறு ஆளப்படுகின்றனர் என்பதைத் தீர்மானிப்பது உரிமையாகும். ஒரு நண்பராகவும் ஜனநாயகக் கூட்டாளியாகவும், பிரிட்டன் உக்ரைனின் இறையாண்மையை அழிக்க முயல்பவர்களின் முயற்சிகளை தடுக்கும்.

ரஷ்யா பின்வாங்கி ஒரு இராஜதந்திர தீர்மானத்தைக் கண்டறியவும் மேலும் உயிர் சேதங்களை தவிர்க்கவும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்-என கூறினார்.

வெளியுறவுச் செயலாளர் லிஸ் ட்ரஸ், பிரதமருடன் உக்ரைனுக்கு செல்லவிருந்தார். ஆனால் திங்களன்று அவர் கோவிட் நோயால் பாதிக்கப்பட்டது கண்டறியப்பட்டதாகவும், சுயமாக தனிமைப்படுத்தப்பட்டதாகவும் அறிவித்தார்.

இதனிடையே, பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன், இந்த வார இறுதியில், ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் பேசுவார் என்று நம்புகிறார்.

ரஷ்யா உக்ரைனுடனான தனது எல்லைக்கு அருகில் 100,000 துருப்புக்கள், டாங்கிகள், பீரங்கிகள் மற்றும் ஏவுகணைகளை குவித்துள்ளது. ஆனால், ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடின், தான் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதாக கூறும் கூற்றை மறுத்துள்ளார்.

எவ்வாறாயினும், ரஷ்யாவின் சொந்த பாதுகாப்புக்கு இது அச்சுறுத்தல் என்று வாதிட்டு, நேட்டோவில் இணைவதற்கான எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டாம் என்று உக்ரைனுக்கு அவரது அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# பிரிட்டன் 'லொக் டவுண்' கால விருந்துகள்:

## தலைமைத்துவத் தோல்வி என்று விசாரணை அறிக்கை கண்டனம்

லண்டன், பெப். 02

பிரிட்டனில் பொது முடக்க காலப் பகுதியில் நம்பர்-10 அலுவலகத்தில் இடம்பெற்ற விதிகளை மீறிய மது விருந்துகள், ஒன்று கூடல்களைத் 'தலைமைத்துவத்தின் தோல்வி' என்று முக்கிய விசாரணை அறிக்கை கண்டித்திருக்கிறது.

நடைபெற்ற ஒன்று கூடல்களில் பலவும் 'அனுமதிக்க முடியாதவை' என்றும் அந்த அறிக்கை சாடியுள்ளது. நாட்டுமக்களுக்கு

சமூக ஒன்று கூடல்கள் தடுக்கப்பட்ட சமயத்தில் நடந்துள்ள 'அளவுக்கதிகமான மது பாவனை' என்று மது விருந்துகளை அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

நாடெங்கும் கொரோனா சுகாதாரக் கட்டுப்பாடுகள் அமுலில் இருந்தவேளை பிரதமரது நம்பர் 10 அலுவலகத்திலும் அரச பணிமனைகளிலும் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற ஒரு டசினுக்கு மேற்பட்ட நிகழ்வுகள் தொடர்பாக விசாரிக்கும்

பொறுப்பு மூத்த சிவில் அதிகாரியான சூ கிறே அம்மையாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நாடு முழுவதும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த அவரது விசாரணை அறிக்கை நேற்று முன் தினம் பிரதமர் அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டது.

12 பக்கங்கள் அடங்கிய அந்த அறிக்கை பிரதமர் ஜோன்சனுக்கு மேலும் நெருக்கடியைக் கொடுத்திருக்கிறது. அறிக்கை

தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் மாலை விளக்கமளித்த அவர், அதனை ஏற்றுக் கொள்வதாகக் கூறினார்.ஆனால் தனது தவறுக்குப் பொறுப்பேற்று என்ன செய்யப் போகிறார் என்பது தொடர்பில் எதனையும் சொல்லாமல் தவிர்த்த அவர், நம்பர் 10 அலுவலகத்தினதும் அமைச்சரவைப் பணிமனையினதும் நிர்வாக நடைமுறைகளில் மாற்றங்களைச் செய்யப்போவதாக மட்டுமே கூறியிருக்கிறார்.

பாராளுமன்றத்தில் 'சொறி' சொல்லிய பிரதமர் , உறுப்பினர்களது கடும் கண்டனக் கணைகளை வாங்கிக்கட்ட நேர்ந்துள்ளது.

பொலீஸ் விசாரணைகள் முடியும் வரை இடம்கொடுங்கள் என்று பிரதமர் கூறிய பதிலால் பாராளுமன்றத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. நாட்டையும் உறுப்பினர்களையும் பிரதமர் ஏமாற்றுகிறார் என்று எதிர்க்கட்சியினர் குரல் எழுப்பினர்.

ஒன்று கூடவும், விருந்து உண்ணவும் நாட்டு மக்களுக்குத் தடைகளை அறிவித்துவிட்டு அரசுத் தலைமை தான் மாத்திரம் விதிகளை மீறிப் பலரை ஒன்று கூட்டி விருந்துகளை நடத்தியமை தெரியவந்ததால் பிரதமர் மீது நாட்டு மக்கள் கடும் சீற்றமடைந்திருக்கின்றனர்.

'பார்ட்டிகேற்' என்று அழைக்கப்படுகின்ற இந்த லொக்-டவுண் விருந்து விவகாரம் பிரதமர் பொறிஸ் ஜோன்சனின் பதவியை ஆட்டம்காண வைத்திருக்கின்றது.எதிர்க்கட்சியினரும் அவரது ஆளும் கட்சியின் மூத்த தலைவர்களும் அவரைப்பதவி விலகுமாறு கோரி வருகின்றனர்.ஆனால் பிரதமரோ அதற்கு இணங்க மறுத்துள்ளார். சம்பவங்களுக்காக அவர் தனது மனப்பூர்வமான மன்னிப்பை ஏற்கனவே கோரியுள்ளார்.

இந்த நிலையிலேயே சூ கிறேயின் முதற்கட்ட அறிக்கை வெளியாகியிருக்கிறது.விதிகளை மீறிய இந்த விருந்துகள் தொடர்பில் குற்றம் இழைக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக லண்டன் பெருநகரப் பொலீஸாரும்

தனியே விசாரணை ஒன்றைத் தொடக்கியுள்ளனர். டவுணிங் வீதி அலுவலகத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் பிரதமரது பிறந்த நாள் கொண்டாட்டம் உட்பட நிகழ்வுகள் தொடர்பாக நூற்றுக் கணக்கான புகைப்படங்களும் ஆவணங் களும் தமக்குக் கிடைத்துள்ளன என்று பொலீஸ் தலைமை அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார். (அ)

# ஐ. பி. எல். மெகா ஏலம் 23 இலங்கை வீரர்கள் பங்கேற்பதற்கு பதிவு!




கொழும்பு, பெப். 02

2022 இந்தியன் பிறீமியர் லீக் (ஐ. பி. எல்.) வீரர்கள் தேர்வுக்கன ஏல நடவடிக்கை எதிர்வரும் பெப்ரவரி 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் பெங்களூரில் நடைபெற வுள்ளது.

இரண்டு நாள் நடக்கவுள்ள இந்த ஏலத்தில் மொத்தம் 590 கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்கவுள் ளனர். இவர்களில் 23 இலங்கை வீரர்களும் அடங்குவர்.

வனிந்து ஹசரங்க தனது இருப்பு விலையை 100 இலட்சம் இந்திய ரூபாயாக நிர்ணயித்துள் ளார். அதேநேரம் 19 வயதுக் குட்பட்ட இலங்கை இளையோர் அணி சகலதுறை வீரர் துனித் வெல்லகேவும் ஏலத்தில் பதிவு செய்துள்ளார்.

ஏலத்தில் பங்கேற்க பதிவு செய்துள்ள இலங்கை வீரர்களின் விவரம் வருமாறு,

வனிந்து ஹசரங்க - 100 இலட்சம் இந்திய ரூபாய், மகேஷ் தீக்ஷண- 50 இலட்சம் இந்திய ரூபாய், துஷ்மந்த சாமீர- 50 இலட்சம் இந்திய ரூபாய், சரித அசலங்க - 50 இலட்சம் இந்திய ரூபாய், குசல் மெண்டிஸ் - 50 இலட்சம் இந்திய ரூபாய், குசல் பெரேரா - 50 இலட்சம் இந்திய ரூபாய், நிரோஷன் திக்வெல்ல - 50 இலட்சம் இந்திய ரூபாய்,

அகில தனஞ்சய - 50 இலட்சம் இந்திய ரூபாய், பானுக ராஜபக்ஷ - 50 இலட்சம் இந்திய ரூபாய், பதும் நிசங்க - 50 இலட்சம் இந்திய ரூபாய், மகேஷ் பத்திரண - 20 இலட்சம் இந்திய ரூபாய், அவிஷ்க பெர்ணான்டோ- 50 இலட்சம் இந்திய ரூபாய், தசுன் சானக - 50 இலட்சம் இந்திய ரூபாய், சாமிக கருணாரத்ன - 50 இலட்சம் இந்திய ரூபாய், லஹிரு குமார - 50 இலட்சம் இந்திய ரூபாய், கவின் கோதேகொட- 20 இலட்சம் இந்திய ரூபாய், திசர பெரேரா- 50 இலட்சம் இந்திய ரூபாய்.

இசுரு உதான - 50 இலட்சம் இந்திய ரூபாய்,

தனுஷ்க குணதிக்க - 50 இலட்சம் இந்திய ரூபாய், நுவான் துஷார - 20 இலட்சம் இந்திய ரூபாய், சீகுகே பிரசன்ன - 50 இலட்சம் இந்திய ரூபாய், தனஞ்சய லக்ஷான்- 50 இலட்சம் இந்திய ரூபாய், துனித் வெல்லாகே- 20 இலட்சம் இந்திய ரூபாய். (ஐ)



## எனக்கு நானே தலைவன்!

### விராட் கோலி

புதுடில்லி, பெப். 02

விராட் கோலியின் 7 ஆண்டுகால தலைமை சகாப் தம் சமீபத்தில் முடிவடைந்தது. இருபது - 20 போட்டி யின் தலைமை பதவியில் இருந்து அவர் முதலில் விலகி னார். ஒருநாள் போட்டிக்கான தலைமை பதவியில் இருந்து விராட் கோலியை இந்திய கிரிக்கெட் சபை நீக்கியது. இதைத் தொடர்ந்து அவர் டெஸ்ட் தலை மைப் பதவியில் இருந்தும் விலகினார்.

இந்த நிலையில் எனக்கு நான் எப்போதுமே தலை வன் என்று விராட் கோலி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

எந்த ஒன்றுக்குமே கால அவகாசம் இருக்கிறது. அதை நாம் எப்போதுமே உணர்ந்திருக்க வேண்டும். நாம் என்ன சாதித்து விட்டோம்? என்று மற்றவர்கள் விமர்சிக்கலாம். ஆனால் முன்னேற்றத்தையும், சாதனை களையும் எட்டும் போது நாம் நமது வேலையை சரி யாக செய்திருக்கிறோம் என்று நமக்குத் தெரியவரும்.

தற்போது நான் ஒரு துடுப்பாட்ட வீரராக அணியின் வெற்றிக்கு அதிக பங்களிப்பு செய்ய முடியும். துடுப்பாட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்துவேன்.

எனக்கு அதில் கிடைக்கும் பெயர் போதுமானது. இதற்காக நான் தலைவராக இருக்க வேண்டியது இல்லை. அணியின் வளர்ச்சிக்காக அடுத்த கட்டம் என்ன என்பதை உணர்ந்து டோனி தலைவர் பதவியை என்னிடம் வழங்கினார். அதே மனநிலையில்தான் நானும் அந்த பொறுப்பில் இருந்து விலகுகிறேன்.

தகுந்த நேரத்தில் முடிவுகள் எடுத்து அடுத்த கட் டத்துக்கு செல்வதும் தலைமை பண்பின் குணம் தான். நான் எப்போதுமே எனக்கு தலைவனாகவே இருக் கிறேன் - என்றார். (ஐ)

# பொதுநலவாய கிரிக்கெட் இலங்கை மகளிர் பி பிரிவில்!

டுபாய், பெப். 02

ஜூலை 29 ஆம் திகதி இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் ஆரம்பமாகவுள்ள 2022 பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி 'பி' குழுவில் விளையாடவுள்ளது.

பொதுநலவாய விளையாட்டு சம்மேளனத்துடன் இணைந்து சர்வ தேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ. சி. சி.) இது தொடர்பான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

எட்டு அணிகள் பங்கேற்கும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிக்கு கடைசியாக தகுதி பெற்ற அணியாக சமரி அதபத்து தலைமையிலான இலங்கை மகளிர் அணி இருந்தது. மலேசியாவில் நடந்த தகுதிச் சுற்றுப் போட்டியில் தோல்வியடையாத ஒரே அணியாக மாறி, போட்டிக்குத் தகுதி பெற்றது.

பொதுநலவாய போட்டியில் இலங்கைக்கு மேலதிகமாக அவுஸ் திரேலியா, பார்படாஸ், இங்கிலாந்து, இந்தியா, நியூசிலாந்து, பாகிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் பங்கேற் கின்றன.

போட்டிகள் லீக் மற்றும் நொக் அவுட் ஆட்டங்களாக நடைபெறும். லீக் கட்டத்தில் இரண்டு




குழுக்களாக போட்டிகள் இடம் பெறும். கடந்த மகளிர் இருபது -20 கிரிக்கெட் உலகக் கிண்ணத்தின் இறுதிப் போட்டிக்கு வந்த அவுஸ்தி ரேலியாவும் இந்தியாவும் குழு ஏ இல் இடம்பிடித்துள்ளன. இதே நேரம் பாகிஸ்தானும், பார் படாஸும் அதே குழுவில் உள்ளன.

குழு பி -இல் இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை அணிகள் இடம்பெற்றுள்ளன.

கிரிக்கெட் வரலாற்றில் இரண் டாவது முறையாக பொது நலவாய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில், தொடரின் இறுதிப் போட்டி ஓகஸ்ட் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இறுதியாக 1998 ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற பொதுநலவாய போட்டியில் ஷேன் பொல்லாக் தலைமையிலான தென் னாபிரிக்க அணி தங்கப் பதக்கம் வென்றது.

இந்தப் போட்டியில் ஸ்டீவ் வாக் தலைமையிலான அவுஸ்திரே லியாவை 4 விக்கெட் வித்தியாசத் தில் தென்னாபிரிக்க அணி தோற் கடித்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்தியா - மே. இ. தீவுகள் தொடர் ரசிகர்களின்றியே நடைபெறும்!

புதுடில்லி, பெப். 02

இந்தியா - மே.இ. தீவுகள் அணிகள் மோதும் ஒருநாள் தொடர் ரசிகர்கள் இன்றி அஹமதாபாத்தில் நடைபெறவுள்ளது.

மே.இ. தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள், 3 இருபது - 20 தொடர்களில் விளையாடுகிறது. ஒருநாள் தொடர் எதிர்வரும் 6ஆம் திகதியும், இருபது - 20 தொடர் எதிர்வரும் 16ஆம் திகதியும் தொடங்குகின்றன.

ஒருநாள் தொடர் அஹமதாபாத்திலும் இருபது - 20 தொடர் கொல்கத்தாவிலும் நடைபெறவுள்ளன. கொல்கத்தாவில் நடைபெறும் மூன்று இருபது - 20 போட்டிகளுக்கும் 75 வீத ரசிகர்களை அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் அஹமதாபாத்தில் உள்ள மோடி மைதா னத்தில் நடைபெறும் மூன்று போட்டிகள்கொண்ட ஒருநாள் தொடரில் இந்த நிலை இல்லை.

இதேவேளை, வரும் 6 ஆம் திகதி மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக நடக்கும் முதல் ஒருநாள் போட்டி இந்திய அணியின் ஆயிரமாவது போட்டி என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)



# ஆளுநருடன் தொலைபேசியில் உரையாட மறுத்த மீனவர்கள்!

## பருத்தித்துறை பொலிஸாரின் முயற்சி தோல்வி

யாழ்ப்பாணம், பெப். 02

**தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் சுப்பர்மடம் மீனவர்களுடன் சமரசத்தை ஏற்படுத்தும் நோக்கில் தொலைபேசி ஊடாக வடக்கு ஆளுநருடன் உரையாடும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருவதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விடுத்த கோரிக்கையை மீனவர்கள் நிராகரித்தனர்.**

போராட்டம் நடைபெற்ற சுப்பர்மடம் பகுதிக்குச் சென்ற பொலிஸ் அதிகாரி, வடக்கு ஆளுநர் கொழும்பில் உள்ளதாகவும் அவருடன் மீனவப் பிரதிநிதிகளில் யாராவது ஒருவர் உரையாட விரும்பினால் தொலைபேசியில் உரையாட வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதாகவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இருந்தபோதிலும் காலாகாலமாக இவ்வாறான வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றனவே தவிர எந்தவித முன்னேற்றமும் இல்லை என்று தெரிவித்து அந்தக் கோரிக்கையை மீனவப் பிரதிநிதிகள் நிராகரித்தனர்.(அ-03)





# இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல் குண்டு துளைக்காத கவச வாகனம்!

கொழும்பு, பெப். 02

இலங்கை மின் இயந்திர மற்றும் பொறியியல் படைப்பிரிவினால் தயாரிக்கப்பட்ட முதலாவது குண்டு துளைக்காத கவச வாகனத்தை இலங்கை இராணுவத் தலைமையகமான ஸ்ரீ ஜயவர்தனபுரவில் பாதுகாப்புப் படைகளின் பிரதானியும், இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

இலங்கையின் 74ஆவது சுதந்திர தின விழாவையொட்டி இடம்பெறும் ஆயுதப்படை அணிவகுப்பில் இந்த கவச வாகனம் சேர்க்கப்படவுள்ளது.

போர்ச் சூழல்களின்போது ராணுவ வீரர்களை பாதுகாப்பாக அழைத்துச் செல்லவும், காயம் அடைந்த ராணுவ வீரர்களை பாதுகாப்பாக அழைத்து வரவும் இது உதவும்.

பொறியியல் துறையைச் சேர்ந்த 15 குழுக்களின் பங்கேற்புடன் நிர்மாணிக்கப்பட்ட இந்த வாகனம் தீ அல்லது குண்டுத் தாக்குதலை சமாளிக்கும் திறன் கொண்டது என இலங்கை மின் இயந்திர மற்றும் பொறியியல் படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் இந்து சமரகோன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவ்வாறான கவச வாகனத்தை வெளிநாட்டில் இருந்து கொள்வனவு செய்வதற்கு 2995 இலட்சம் ரூபா செலவாகும் எனவும், இலங்கையில் தயாரிக்கப்பட்ட இந்த குண்டு துளைக்காத இந்த கவச வாகனத்தின் விலை 15 மில்லியன் ரூபா.

எதிர்காலத்தில் இதுபோன்ற பத்து இலகுரக குண்டு துளைக்காத வாகனங்களை தயாரிக்க ராணுவம் திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் தற்போது போர்ச்சூழல் இல்லையென்றாலும், நாடு முழுவதும் நிலச்சரிவு, வெள்ளம், தீ போன்ற அவசரநிலைகளுக்கு கணிசமான எண்ணிக்கையிலான ராணுவத்தினரை பாதுகாப்பாக ஏற்றிச் செல்லும் திறன் கொண்டது இந்த வாகனம்-என்றார். (அ)

# மேலும் 517 பேர் குணமடைவு

கொழும்பு, பெப். 02

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 517 பேர் குணமடைந்து நேற்று செவ்வாய்க்கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 78 ஆயிரத்து 849ஆக அதிகரித்துள்ளது.

# மக்களை அச்சுறுத்திய முதலை பிடிக்கப்பட்டது

கொழும்பு, பெப். 02

பமுனுகம கடற்பகுதியில் சஞ்சரித்த முதலையொன்று பிரதேசவாசிகளால் பிடிக்கப்பட்டுள்ளது. பமுனுகம கடற்பரப்பில் அண்மைக்காலமாக அவதானிக்கப்பட்ட முதலை யொன்றை நேற்று அதிகாலை பிரதேசவாசிகள் பிடித்துள்ளனர்.

மீன்பிடியை ஜீவனோபாயமாகக் கொண்ட இவர்கள், முதலையின் அச்சுறுத்தலினால் கடற்றொழிலுக்கு செல்வதில் கடந்த காலத்தில் தயக்கம் காட்டி வந்தனர்.

பிடிக்கப்பட்ட முதலை ஜா-எல வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடத்தில் நேற்றுக் காலை ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# பொலிஸாருக்கு இடையூறு விளைவித்த இருவர் கைது

கொழும்பு, பெப். 02

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து வெளிநாட்டுப் பணம் மற்றும் வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

200 யூரோ, 58 அமெரிக்க டொலர், ஆறு இலட்சத்து ஐயாயிரத்து 430 ரூபா, ஒரு லீற்றர் கொள்ளளவான 49 மதுபானப் போத்தல்கள் என்பன சந்தேகநபர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)



# பறவைகள் பார்வை கோபுரம் மன்னார் மாவட்டத்தில் திறப்பு!

மன்னார், பெப். 02

மன்னார் மாவட்டத்தின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் மன்னார் மாவட்டத்துக்கு பருவ காலங்களில் வருகை தரும் வெளிநாட்டுப் பறவைகளை பார்வையிடுவதற்காகவும் பறவைகள் பார்வை கோபுரம் நேற்று முற்பகல் 10 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

யு.என்.டி.பி. நிதி அனுசரணையில் 7மில்லியன் ரூபா செலவில் 35 அடி உயரத்தில்-மன்னார் பிரதான பாலத்துக்கும் தள்ளாடி சந்திக்கும் இடையில் உள்ள வங்காலை பறவைகள் சரணாலயம் பகுதியில் அமைக்கப்பட்ட இந்த பறவைகள் பார்வை கட்டடக் கோபுரத்தை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் மற்றும் யு.என். டி.பியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி றொபேர்ட் ஜூக்கம், சுற்றுச்சூழல் அமைச்சின் சார்பாக வருகை தந்திருந்த இணைப்பாளர் சாணக்க மகேனி, பறவைகள் சரணாலயம் திணைக்களத்தின் பணிப்பாளர் மஞ்சுள அமரரத்ன ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் மன்னார் பிரதேச செயலாளர் ம.பிரதீப், மன்னார் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் றோய் பீரிஸ், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, வனவளத் திணைக்களம் மற்றும் பறவைகள் சரணாலய திணைக்களத்தின் அதிகாரிகள், யு.என்.டி.பி அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# நாட்டில் டெங்கு நோய் மீண்டும் தீவிரம் ஜனவரியில் மாத்திரம் 7,656 நோயாளர்!

கொழும்பு, பெப். 02

கடந்த ஜனவரி மாதத்தில் 7656டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

2021ஜனவரியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2122ஆகவும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு ஜனவரியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இருப்பதாகவும் அவர் கூறினார்.

பொதுவாக மூன்று வருடங்களுக்கு ஒருமுறை டெங்கு நோய் பரவுவது வழக்கமாக இருப்பதாகவும், இந்த வருடம் டெங்கு பரவலாம் என கடந்த 15 வருட அனுபவத்தில் இருந்து தகவல்கள் தெரிவிக்கின்றன என்றும் அவர் கூறினார்.

ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர், ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருவதாகவும், கோவிட் நோயால் பாதிக்கப்பட்ட டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தால், அது ஒரு தீவிர தேசிய சுகாதாரப் பிரச்னையாக மாறும் என்றும் அவர் கூறினார்.

டெங்கு பரவுவதை தடுக்க முடியும் என்றும், டெங்கு குடும்பிகள் பரவாமல் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## இயலாமையை...

மேற்கோள்காட்டி சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பிராந்திய செயல் பாட்டாளர் த்யாகி ருவான் பத்திரண அவரது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, நீதி அமைச்சு வடக்கில் நடத்திய நடமாடும் சேவை கடந்த ஞாயிற் றுக்கிழமை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதன் போது, உரையாற்றிய நீதியமைச்சர் அலிசப்ரி, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்னைக்குத் தீர்வை வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி தனக்குப் பிரத் யேகமாக ஆலோசனைகளை வழங்கி யிருப்பதாகவும் யார், என்ன காரணத்திற் காகக் காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்பதை விடவும் அவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினருக்கு அவசியமான நட்டஈடு உள்ளிட்ட ஏனைய உதவிகளை வழங்குமாறு ஜனாதிபதி பணித்திருப்பதாகவும் தெரிவித்திருந்தார். அதுமாத்திரமன்றி மரணச் சான்றிதழை வழங்கி இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாணு மாறு ஜனாதிபதி கூறியிருக்கிறார் என்றும் நீதியமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையில், ருவான் பத்திரண தனது பதிவில் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்பதை ஆராயாமல், அவ்வாறான சம்பவங்களுக்குப் பொறுப் புக்கூறவேண்டியவர்களைக் கண்டறியா மல் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் பொருளாதார ரீதியில் தற்போது முகங்கொடுத்திருக்கக்கூடிய இயலாமையைப் பயன்படுத்தி அவர் களுக்கு இழப்பீட்டை வழங்குவதற்கு முற்படும் அரசாங்க அமைச்சர்களின் நடவடிக்கை வெட்கத்திற்குரியது.

அத்துடன், இழப்பீட்டுக்குப் பிரதியுப காரமாக காணாமல் ஆக்கப்பட்டவர் களின் தாய்மாருக்கு இறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டதா? இதற்குப் பதிலாக 'காணாமல் போனமைக்கான சான்றிதழை' பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு காணப்படுவது பற்றி அவர்களுக்குக் கூறப்பட்டதா? அவர்கள் இடைக்கால நட்டஈட்டைப் பெறுவதற்குத் தகுதியு டையவர்களா? அவர்களுக்கான உண்மை, நீதி மற்றும் இழப்பீடு ஆகியவற்றை வழங்குவதற்கான பொறுப்பு அரசாங் கத்திற்கு இருக்கின்றதா? ருவான் பத்திண கேள்வி எழுப்பினார். (ஐ)

## ஹர்த்தால்...

களின் அத்துமீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தை முடக்கும் போராட்டத்துக்கு யாழ். மாவட்ட கடற் றொழிலாளர் சமாசம் நேற்று அழைப்பு விடுத்தது. இதற்கு ஆதரவு தெரிவித்து தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையில், "எமது கடற் றொழிலாளர்கள் பல வருடங்களாக - அன்றாடம் பெரும் பிரச்னைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள். எல்லை தாண்டிய இந்திய இழுவைப் படகுகள் இவர்களின் வாழ்வாதாரத்தை முற்றாக அழித்து வருகின்றன. எமது மீன் வளங் களை இல்லாது ஒழிக்கும் நடவடிக்கை யாகவே இவை அமைந்துள்ளன.

முன்னர் இந்தியக் கடல் எல்லைக்குள் இருந்த இடங்களில் கடல் வளங்கள் பல வற்றையும் இல்லாமல் ஆக்கியவர்களே இப்போது இழுவைப் படகுகள் மூலம் எமது வளங்களையும் சூறையாடி வருகின் றார்கள். இந்நிலை தொடர்ந்தால் அது எமது மீனவர்களையே வெகுவாகப் பாதிக்கும். ஆனால், இதே நேரத்தில் வன்முறையில் ஈடுபடுவோர் யார், எதற் காக அவ்வாறு ஈடுபடுகின்றார்கள் என் பதை நாம் ஆராய்ந்து அறிய வேண்டும்.

மூன்றாம் தரப்பாரின் உள்ளீடுகள் இதில் சம்பந்தப்பட்டுள்ளனவோ என்பதை யும் நாம் ஆராய வேண்டும். எமது கடற் றொழிலாளர்களின் வலைகள், படகுகள் போன்ற உபகரணங்கள் சேதமாக்கப்பட்டு எம்மவர்களின் வாழ்வாதாரமே அழிக்கப் பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கை கள் அதிகரித்துக் கொண்டே வருவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இவை போதாதென்று எம்மவர்களின் உயிரிழப்புக்களும் தாங்கொண்ணா வித மாக அதிகரித்து வருகின்றன.

இது விடயத்தில், எமது அரசாங்கம் இனிமேலும் பாராமுகமாக இருக்காது எமது கடற்றொழிலாளர்களின் பிரச்னை களைத் தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கத்திற்கு உறைக்கும் விதமாக ஹர்த்தால் நடவடிக் கையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு எமது அனுதாபத்தையும் ஆதரவையும் தெரிவித் துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## வடக்கு...

இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க புறப்பட் டனர்.

இந்திய மீனவர்கள் நள்ளிரவு இலங் கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது வடம ராட்சி மீனவர்கள் படகுகளில் புறப்பட் டுச் சென்று அவர்களைச் சுற்றிவளைத் தனர். இதனால் கடலில் பெரும் முறுகல் நிலை ஏற்பட்டது. இதன்போது இந்திய மீனவர்கள் வடமராட்சி மீனவர்கள் மீது பெற்றோல் குண்டுகள் வீசி தாக்குதல் நடத்தினர் என குற்றம் சாட்டப்பட்டது. இதன்போது உடனடியாக அங்கு விரைந்த இலங்கைக் கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இரண்டு விசைப் படகுகளையும் அதிலிருந்த 21 மீனவர் களையும் கைதுசெய்து மயிலட்டித் துறை முகத்துக்கு அழைத்துச் சென்றனர்.

கடந்த 27ஆம் திகதி யாழ்ப்பாணம்- வடமராட்சியில் இருந்து பைபர் படகில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களின் படகின் மீது தமிழக மீனவர்களின் மீன்பிடி விசைப் படகு மோதியதில் படகு நடுக்கடலில் மூழ்கிப் படகில் இருந்த வடமராட்சி கிழக்கு மீனவர்கள் மாயமானதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்நிலையில் படகு மூழ்கி மாயமான இரண்டு மீனவர்களும் நேற்று முன்தினம் மாலை சடலமாக கரை ஒதுங்கினர்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் தமிழக மீனவர்களை படகுகளுடன் கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தி வடமராட்சி பகுதியில் நேற்று முன்தினம் காலை முதல் வீதிகளில் படகுகளை வைத்து மீனவர் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அதனை தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாண மீனவர்கள் தங்களது பைபர் படகுகளில் கடலுக்குள் சென்று எல்லை தாண்டி வந்துள்ள தமிழக மீனவர்கள் படகுகளை சுற்றி வளைத்து சிறைப் பிடிக்க படகுகளுடன் சென்றனர்.

அப்போது வடமராட்சிக் கடற்பரப் பில் எல்லை தாண்டி மீன்பிடித்து கொண் டிருந்த நாகை மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு படகையும் அதிலிருந்த 21 மீனவர்களையும் இலங்கை மீனவர்கள் சுற்றிவளைத்து சிறைப்பிடித்து கரைக்கு கொண்டு வர முயற்சி செய்தனர்.

அப்போது அங்கு ரோந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இலங்கை கடற் படையினர், வடமராட்சி மீனவர்களால் பிடிக்கப்பட்ட இரண்டு படகையும் அதி லிருந்த 21 மீனவர்களையும் கைது செய்து மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்கு அழைத்து சென்றனர். (அ-02-03)

## மீனவர்...

னைகளைச் சந்தித்து வருகின்றனர்.

தமது பிரச்னைகளுக்கு உரிய தீர்வை முன்வைக்கக் கோரி, பிரதான போக்கு வரத்துத் தடங்களை இடைமறித்து மீனவர்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

கடற்றொழில் அமைச்சர் மீனவர்களு டன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்த போதும், சமரசம் ஏற்படவில்லை.

இந்நிலையில், மீனவர் அமைப்புக் களை கலந்துரையாடலுக்கு வருகை தரு மாறு வடக்கு மாகாண ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று முற்பகல் 10 மணிக்கு இந்த பேச்சு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது. (அ-02)

# தமிழில் தேசிய கீதம் பாடுவதா இன்னமும் தீர்மானிக்கவில்லை!

கொழும்பு, பெப். 02

சுதந்திர தின வைபவத்தின் போது தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடுவது தொடர்பில் தீர்மானிக்கப்படவில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங் கம் ஆட்சியமைத்ததன் பின்னர் சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் பாடப்பட்டது.

இருப்பினும் 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்த நடை முறை நீக்கப்பட்டது.

இதற்கு பல தரப்பினராலும் கண்டன மும், அதிருப்தியும் வெளியிடப்பட்டது. எவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப் பட்ட போதிலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் சுதந்திர தின கொண்டாட்டங்களின் போது தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட வில்லை.

இந்நிலையில் இவ்வருடமாவது தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக் கப்படுமா என்று நேற்று அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடம் கேள்வி எழுப்பப்பட்டது. 'அது குறித்த எந்த தீர்மான மும் எடுக்கப்படவில்லை. அதற்கு தற்போது என்னால் பதிலளிக்க முடியாது.' என்று அவர் பதிலளித்தார்.

# சித்தங்கேணியில் மோ. சைக்கிள் களவு

வட்டுக்கோட்டை, பெப். 02

சித்தங்கேணி பகுதியில் மோட்டார் சைக்கிள் நேற்று திருட்டு போயுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தபால் நிலையத்தில் வேலை செய்யும் மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் குறித்த மோட்டார் சைக்கிளை சித்தங் கேணி மதுவரி நிலையத்திற்கு அருகில் நிறுத்திவிட்டு சென்றுள்ளார்.

பின்னர் திரும்பி வந்து பார்த்தவேளை அவரது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருந்தது. இதுதொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

## பயங்கரவாத...

ஏற்படும். இதற்கு மத்தியில் அரசாங்கம் தற்போது சர்வதேச அழுத்தத்தின் தாக்கத்தை உணர ஆரம்பித்துள்ளது.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு சர்வதேச சமூகம், பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையான திருத்துவதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தங்களை பிர யோகிக்க வேண்டும் - என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத் தியுள்ளது. (ஐ)

## பலாலி...

வாய்க்கிழமை நடைபெற்ற இந்த போராட் டத்தால் பருத்தித்துறை-பொன்னாலை வீதியின் போக்குவரத்து முற்றாக பாதிக் கப்பட்டது.

போராட்டத்தை முன்னெடுத்த மீன வர்கள் வீதிகளின் குறுக்கே படகுகள் மற்றும் வலைகளை போட்டு தமது போராட்டத்தை முன்னெடுத்தமை குறிப் பிடத்தக்கது. (அ-02-03)

## அரச...

வடமராட்சி கிழக்கு மீனவர்கள் இரு வரை இந்திய மீனவர்கள் படகுகளால் மோதிப் படுகொலை செய்யப்பட்டமை யின் தொடராக யாழ்ப்பாணத்தின் வட மராட்சி, வடமராட்சி கிழக்கு உட்பட்ட கரையோரப் பகுதிகளில் மீனவர்களின் போராட்டம் தீவிரம் பெற்றுள்ளது.

குறித்த பகுதிகளில் வீதிகள் முடக்கப் பட்டுப் போராட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றன.

இந்நிலையில் பருத்தித்துறையில் மீன வர் சங்கப் பிரதிநிதிகள் ஒன்றுகூடி சில தீர்மானங்களை மேற்கொண்டுள்ளனர்.

அவற்றின் அடிப்படையில்,

இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த கடற்படையினர் உத்தரவாதம் வழங்க வேண்டும். அதேபோல கடற்றொழில் அமைச்சரும் வாக்குறுதி வழங்கவேண் டும்.

வழமைபோல வாக்குறுதி வழங்கியும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் அடாவடி நடவடிக்கைகள் தொடர்ந்தால் தொழில் முடக்கப் போராட்டம் முன் னெடுக்கப்படும்.

அதேபோல பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகம் உட்பட்ட அரச திணைக்களங்களை முடக்கிப் போராட் டத்தில் ஈடுபடத்தீர்மானித்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-02-03)

## யாழ்ப்பாணத்திலும்...

அதிகரித்த மின்சார தேவையின் கார ணமாகவே இந்த மின்சாரம் தடைப்பட் டதாக இலங்கை மின்சார சபை தெரிவித் தது.

இதேவேளை, நேற்றைய தினம் நுரைச் சோலை அனல் மின்நிலையத்தில் 270 மெகாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இயந்திரம் தொழில்நுட்பக் கோளாறால் இயங்காமல் போனதாகத் தெரிவிக்கப்பட்டது.

எது எப்படி இருப்பினும் இந்த செய லிழப்பால் மின்சாரம் தடைப்படாது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு கூறியிருந்த நிலையிலேயே நாட்டின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்பட் டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கறுப்பு சந்தை...

வட்டமாக மறுத்துள்ளார் என்றும் தெரி வித்துள்ளது.

கறுப்புச் சந்தை டொலர்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பல கொள்வனவுகள் தொடர்பில் சில சர்ச் சைக்குரிய கருத்துக்களை நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ வெளியிட்டாரென முன்னர் ஊடகங்களில் செய்திகள் வெளி யாகியிருந்தன என்பது குறிப்பிடத்தக் கது. (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கள் சங்கங்களின் சமாசங்களின் அழைப் பின் பிரகாரம், யாழ்ப்பாணம் மாவட் டத்தின் பிரதான வீதிகளை முடக்கும் போராட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. இந்த நிலையில், போராட்டத்திற்கு ஆதர வளிக்குமாறு பொது அமைப்புக்கள் அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற் சங்கங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது. (ஐ)

## வடக்கில் நேற்று...

சோதனையின் அறிக்கையிலேயே இந்த விவரம் வெளிவந்தன.

இதன்படி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பெறப்பட்ட மாதிரி களில் 22 பேரும், யாழ்ப்பாணம் சிறைச் சாலையிலிருந்து கிடைக்கப்பெற்ற மாதிரி களிலிருந்து 3 பேரும் மன்னார் மாவட்ட பொது மருத்துமனை அனுப்பி வைத்த மாதிரிகளில் ஒருவரும் தொற்றாளர் களாக அடையாளம் காணப்பட்டனர்.

நேற்றையதினம் 144 பேரின் மாதிரி கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டி ருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ராஜபக்ஷ குடும்ப ஆட்சி வீழ்ச்சிக்கு முட்டை தாக்குதல் எடுத்துக்காட்டு!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, பெப். 02

கம்பகாவில் சில தினங்களுக்கு முன்னர் மக்கள் விடுதலை முன்னணி மீது முட்டைத் தாக்குதல் மேற்கொண்டமையும், ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பேரன் மீதான முட்டைத் தாக்குதல் சம்பவமும் அண்மைக்காலமாக ராஜபக்ஷ குடும்ப அரசும் சமூகமும் சீரழிந்து வருவதன் அளவை எடுத்துக்காட்டுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொள்கையில் இருந்து விலகி, வேலைத்திட்டங்கள் செயலிழந்து, விழுமிய மதிப்புக்களால் வீழ்ச்சி கண்ட நாட்டால் முன்னேற முடியாது எனக் குறிப்பிட்ட எதிர்க்கட்சித் தலைவர், முட்டைத் தாக்குதல் போன்ற கேவலமான செயல்கள் சீரழிந்த ராஜபக்ஷ குடும்ப அரசின் யதார்த்தத்தையே புலப்படுத்துகின்றது எனவும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் முற்போக்கு எண்ணக்கருவாக அமைந்த, அதிநவீன தொழில் நுட்பத்துடன் கூடிய திறமையான இளம் தலைமுறையை உருவாக்கும் நோக்கில், வகுப்பறைகளுக்கான டிஜிற்றல் கணனித் திரைகள் மற்றும் கணனி உபகரணங்களை வழங்கும் முன்னோடித் திட்டமான 'பிரபஞ்சம்' திட்டத்தின் 11ஆவது கட்டம் நேற்று ஆரம்பமானது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் முற்போக்கு எண்ணக்கருவாக அமைந்த நவீன உலகில் வளமான டிஜிற்றல் எதிர்காலத்துக்காக இந்நாட்டின் இளைய தலைமுறையை, தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற, ஸ்மார்ட் கணனிப் பயன்பாட்டில் தேர்ச்சி பெற்ற சமூகமாகக் கட்டியெழுப்பும் 'பிரபஞ்சம்' முன்னோடித் திட்டத்தின் பதினோராவது கட்டத்தில், எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்பிலான வகுப்பறைகளுக்கான டிஜிற்றல் கணினித் திரைகள் மற்றும் கணனி உபகரணங்களை மதவாச்சி அகுநொச்சி மகா வித்தியாலயத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று வழங்கிவைத்தார்.

இதன்போது உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## மரண அறிவித்தல்



பிறப்பு 21 - 01 - 1954

இறப்பு 29 - 01 - 2022

### திருமதி கலையரசி சிறிவள்ளிநாயகம்

யாழ். அத்தியடியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Torcy ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கலையரசி சிறிவள்ளிநாயகம் அவர்கள் 29.01.2022 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் – அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான கந்தையாபிள்ளை அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும்,சிறிவள்ளிநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், கீர்த்திகா, கீர்த்திபன், யாழினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சூரியகுமார்(கனடா), மகேந்திரகுமார்(கனடா), சுரேந்திரகுமார் (பிரான்ஸ்), விஜயகுமார்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,மார்க் அந்துவான், யுஸ்ரின் ஆகியோரின் அன்பு மாமியும், அபிராமி, நிலா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

கிரியை :
Monday, 07 Feb 2022 9:30 AM - 10:30 AM
Chambre Mortuaire Du Grand Hospital Eastern Ile - Website De Meaux Chem. de l'Hospice, 77100 Meaux, France

தகனம் :
Monday, 07 Feb 2022 11:00 AM
crématorium de Saint Soupplets 2 Rue du Pré de Vornat, 77165 Saint-Soupplets, France

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**கீர்த்திபன் - மகன்**
**Mobile : +33652405308**

தகவல்:
**குடும்பத்தினர்**




# வட்டுக்கோட்டையில் நகை, பணம் திருட்டு!

வட்டுக்கோட்டை, பெப். 02

வீட்டின் கண்ணாடியை உடைத்து உள்ளே நுழைந்து ஒரு பவுண் நகையும் 10 ஆயிரம் ரூபாயையும் திருடப்பட்டுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை சங்கரத்தை - ஓடக்கரை வீதியிலுள்ள வீடு ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

கணவர் வேலைக்கு சென்ற நிலையில் மனைவி மகளை பாடசாலையிலிருந்து வீட்டுக்கு அழைத்து வர சென்றிருந்த சமயமே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஐ)

# வவுனியா விபத்தில் ஒருவர் படுகாயம்!

வவுனியா, பெப். 02

வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஏ-9 வீதியில் இரு டிப்பர் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று மாலை இடம்பெற்ற குறித்த விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியூடாக ஓமந்தை பகுதி நோக்கி டிப்பர் பயணித்துக் கொண்டிருந்தபோது மாவட்ட செயலகத் திற்கு முன்பாக டிப்பர் வாகன சாரதி சடுதியாக பிறேக் பிடித்துள்ளார்.

இதன்போது, டிப்பர் வாகனத்திற்கு பின்பக்கமாக வந்து கொண்டிருந்த மற்றொரு டிப்பர் வாகனம் குறித்த டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானதுடன், வீதிக்கு அருகே நின்ற மோட்டார் சைக்கிளும் டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் நின்றவர் படுகாயமடைந்தார். (ஐ)




## மரண அறிவித்தல்



பிறப்பு 19 - 11 - 1946

இறப்பு 26 - 01 - 2022

### கந்தையா பாலச்சந்திரன்

**(ஓய்வுபெற்ற அதிபர்- மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம் & Royal Bank, Toronto)**

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், களுவாஞ்சிக்குடி, கனடா Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலச்சந்திரன் அவர்கள் 26.01.2022 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா – செல்லமாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான இராசையா இராசமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், சரோஜினிதேவி அவர்களின் அன்புக் கணவரும், வேணுகானன், கோவர்தனன், பிருந்தாபன், சைலுஜன், சுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பியூலா, சலிபா ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,தவலட்சுமி, கமலநாதன், மனோகரன், காலஞ்சென்ற நவரட்ணராஜா, சிவானந்தம், சிவபாலன், குகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தனேஸ்வரன், இரத்தினேஸ்வரன், ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற நடேசமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும், அஞ்சனா, அவானி, கிருஷ்ணா ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 05 Feb 2022 5:00 PM - 9:00 PM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada

கிரியை :
Sunday, 06 Feb 2022 8:00 AM - 12:00 PM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada

தகனம் :
Sunday, 06 Feb 2022 12:00 PM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**சரோஜினி - மனைவி**
**Mobile : +14164121233**
**வேணுகானன் - மகன்**
**Mobile : +14165083654**
**கோவர்தனன் - மகன்**
**Mobile : +14166058545**
**சுஜன் - மகன்**
**Mobile : +16475271233**

தகவல்:
**குடும்பத்தினர்**




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-தோழா,24 திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
07.00 மணி : பாரதீ
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்- இ.எஸ்.பி.நாகரத்தினம்



9.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

---

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

---

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

---

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

---

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

---

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

---

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு